# சங்கமயுகம்

மலர்: 29 அக்டோபர்-நவம்பர் 2015 இதழ்: 4 இருமாத இதழ்: ரூ. 8.00




**சென்னை:** அரசியல் துறையை சார்ந்தவர்களுக்காக நடத்தப்பட்ட மாநாட்டின் துவக்க விழாவில் வரவேற்கின்றார் பி.கு. பீனா: மேடையில்: Dr. P. வேணுகோபால், M.P. திரு. சி. பொன்னையன், முன்னாள் நிதி அமைச்சர், மாண்புமிகு அமைச்சர் B.V. இரமணா, இராஜயோகி பி.கு. பிரிஜ் மோகன்ஜி, Chairperson – Politicians' Service wing பி.கு. இலட்சுமிஜி, National Coordinator , Politicians' Service wing மைசூர், சென்னை மாநகர மேயர் திரு. சைதை துரைசாமி, மாண்புமிகு அமைச்சர் S. அப்துல்ரஹிம், திரு. N.S.A.R. மணிமாறன், திரு. மொளச்சூர் R. பெருமாள், M.L.A திருபெரும்புதூர்




**சென்னை:** அரசியல் துறையை சார்ந்தவர்களுக்கான மாநாட்டின் நிறைவு விழாவில் திரு V. சோம சுந்தரம் M.L.A. Dr. அருண் Kr. சர்மா, Ex.M.P. அஸ்ஸாம், மாண்புமிகு அமைச்சர் S. கோகுல இந்திரா, மாண்புமிகு அமைச்சர் T.K.M. சின்னையா, திரு. வாலாஜாபாத் கணேசன் M.L.A., திரு. K.N. இராமசந்திரன், M.L.A., திரு. கடம்பூர்ராஜா, M.L.A., மற்றும் அரசியல் பிரமுகர்கள்



**சென்னை:** அரசியல் துறையை சார்ந்தவர்களுக்கான மாநாட்டில் பங்குபெற்ற அரசியல் துறையை சார்ந்த முக்கியஸ்தர்கள்.



மாண்புமிகு அமைச்சர் B.V. இரமணா அவர்களுக்கு பொன்னாடை அணிவிப்பவர் பி.கு. பாண்டியன்



திரு. சி. பொன்னையன், முன்னாள் நிதி அமைச்சர், அவர்களுக்கு பொன்னாடை அணிவிப்பவர் பி.கு. குருநாதன்



மாண்புமிகு அமைச்சர் S. அப்துல்ரஹிம் அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கபடுகிறது



மாநகர மேயர் திரு. சைதை துரைசாமி அவர்களுக்கு இறை நினைவு பரிசு அளிக்கின்றார் பி.கு. இலட்சுமி, மைசூர்



Dr. P. வேணுகோபால், M.P. அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கபடுகிறது



திரு. மொளச்சூர் R. பெருமாள் M.L.A திருபெரும்புதூர் அவர்களுக்கு பொன்னாடை அணிவிக்கபடுகிறது



மாண்புமிகு அமைச்சர்: T.K.M. சின்னையா



மாண்புமிகு அமைச்சர் S. கோகில இந்திரா



இராஜயோகினி பி.கு. இலட்சுமிஜி, மைசூர்



Dr. அருண் Kr. சர்மா. Ex.MP, Assam



திரு. கங்காராம், Ex. M.L.A. நிஜாமாபாத்

தலையங்கம்

# இராஜயோகம் ஏன்?

இராஜயோகம் இல்லறத்தில், வாழும் கலையைக் கற்பிக்கின்ற உயர் கல்வியாக இருக்கின்றது. இக்கல்வியானது வாழ்க்கையில் மிகவும் அவசியமாக இருக்கின்ற தருணத்தில் கற்பிக்கப் பட வேண்டிய கல்வியாகவும் இருக்கின்றது. ஆதலால் இக்கல்வி ஒவ்வொரு கல்பத்திலும் 5000 ஆண்டுகளுக்கொருமுறை சுயம் பரமாத்மாவே கற்பிக்கின்றார் எனவும் அறிகின்றோம். ஏனெனில் இக்கல்வியானது சூட்சுமமானதும் அழிவற்றதுமாயிருக்கின்ற ஆத்மாவுக்கு, தான் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய தர்மத்தைப் பற்றியதாக இருக்கின்றது என்பது தான். இதுபற்றி மனிதன் அறியாத காரணத்தால், கற்பிக்கவும் இல்லை, கற்பிக்கவும் இயலாது. தர்மத்தை ஸ்தாபனை செய்வதற்காக பரமாத்மா கலியுக இறுதியான புருஷோத்தம சங்கமயுகத்தில் இவ்வாறு உபதேசம் செய்திருக்கின்றார்.

இது ஸ்ரீமத் பகவத்கீதை எனும் பெயரில் 2500 ஆண்டுகளுக்குப் பின்னர் துவாபரயுகத்தில் நூல் வடிவிலும், சாஸ்திர மாகவும் நடைமுறையில் வந்துள்ளது. இந்த கீதை ஞானம் வாழ்க்கையில் வாழும் கலையைக் கற்பிக்கும் அவசியமான கல்வியாக இருந்த போதிலும், இது நடைமுறையில் தொடர்ந்து பின்பற்றப்படவில்லை என்பதே அனுபவமாக இருக்கின்றது. காரணம் என்ன என்று பார்த்தோமானால், இதனைப்பின்பற்றி நடப்பதற்கு அவசியமான வழி காட்டுதலும், உதவியும், சக்தியும் இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. கீதை ஞானத்தைப் புரிந்து கொண்ட ஒரு சிலரும் கர்மத்தைத் துறக்கும் துறவிகளானார்களே தவிர, இல்வாழ்க்கையில் கர்மத்தைத் துறக்காமல், அறம் காக்கும் கர்ம யோகியாக தாமரை மலர் போன்று பற்றற்றும் டிரஸ்டியாகவும் வாழ வேண்டும் அல்லது

## சங்கமயுகம்

## பொருளடக்கம்

மலர்: 29 அக்டோபர்-நவம்பர் 2015 இதழ்: 4


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 01 |
| 2. | பகவான் வாக்கு | 05 |
| 3. | ராஜசூய அசுவமேத யக்ஞம் | 05 |
| 4. | சுயதரிசன வலம் வருவோம் | 08 |
| 5. | ஞான கீதம் (பாட்டு) | 11 |
| 6. | தீப ஒளித் திருநாள் | 12 |
| 7. | தூய்மை (சிறுகதை) | 19 |
| 8. | விளையாட்டில் மன சக்தி | 21 |
| 9. | அகம்பாவத்தை கட்டுக்குள் வைத்தல் | 24 |
| 10. | கேள்வி - பதில் | 26 |
| 11. | வாழ்க்கை வாழத்தான்.... | 28 |
| 12. | சத்குரு ஒருவரே.... | 31 |


இந்த இதழில் வெளியாகும் ஆன்மீகக் கருத்துக்கள் கலியுகத்தின் இறுதியான இன்றைய புருஷோத்தம சங்கமயுகத்தில் அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற பரமபிதா பரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக இப்பூவுலகில் மீண்டும் தர்மத்தை ஸ்தாபனம் செய்வதற்காக அருளிச் செய்த மகாவாக்கியத்திலிருந்து தொகுத்து வழங்கப் பட்டவையாகும். ஆசிரியர்

**“தூய்மையே சங்கமயுகத்தின் ஆஸ்தி”**

வாழ முடியும் என்பதிலிருந்து விலகியே இருந்து விட்டார்கள். என்ன காரணம் என்பதை அவரவரே தீர்மானிக்கட்டும்.

ஸ்ரீமத் பகவத் கீதை, எல்லோருக்குமான பகவானுடைய உபதேசமாகவே இருக்கின்றது. எனினும் இதனை எல்லோருமே ஏற்றுக் கொள்ளாமல் போனதற்கு காரணம் யார்? என்பது சிந்தனைக்குரிய விஷயம். மேலும் இதனை பகவானுடைய உபதேசம் என்பதால் சிரத்தையுடன் படித்தோம், பல முறை பாராயணம் செய்தோம், பிறருக்கும் எடுத்துரைத்தோம், பாவனையுடன் பக்தியும் செய்து கொண்டிருக்கிறோம் என்பதாகவே இன்று வரையிலும் நீடிக்கும் நிலையாக இருந்து கொண்டிருக்கிறது. பகவான் தன்னுடைய உபதேசத்தின் மூலம் தர்மத்தை ஸ்தாபனை செய்தார். ஆரம்பத்தில் இதனை வாழ்வில் பின்பற்றி நடந்து வந்ததால் தர்மம் மேலோங்கி சம்பூரண சுகமாகவே வாழ்ந்திருந்த காலமாகவும் இருந்தது. ஆனால் இப்போது அதர்மமே மேலோங்கி இருக்கிறது. இதனால் துக்கமும் மேலோங்கியே இருக்கின்றது. ஆதலால் நாம் பகவானுடைய உபதேசத்தை இடையில் கடைப்பிடித்து நடக்காமல் கை விட்டுவிட்டோம் என்பதே இதற்குக் காரணம் என்பது தெள்ளத் தெளிவாகவே புலனாகிறது. ஆதலால் இப்போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பது மிக முக்கியமான தாகிவிட்டது.

இராஜயோகத்தின் அவசியம் பற்றி இன்னும் சில சூழ்நிலைகள் காரணமாகிவிடுகிறது என்பது பற்றி பார்ப்போம். மேலோகத்தில் அசரீரியாகவே இருந்த ஆத்மாக்கள் பூலோகம் வந்தவுடன் சரீரம் தரித்துக் கொள்வதால், ஜீவாத்மாக்கள் என்கின்றோம். இங்கு வந்த பின் காலத்தால் நாளடைவில் தங்கள் சுய தர்மத்தை விட்டு விலகிச் சென்று விடுகிறது. எண்ணமும் செயலும் கூட தேக அபிமானத்திற்குட்டதாக ஆகிவிடுவதால் பந்தனத்தில் சிக்கிக் கொண்டு விடுகிறது. இவ்வாறு உலக பந்தனத்தில் இருக்கின்ற ஜீவாத்மாக்கள் என்ன செய்வதென்று தெரியாத நிலையிலும், உலக பந்தனத்திலிருந்து விடுபட வேண்டுமென்று விரும்புகிறது. இதற்கான வழி காட்டுவது தான் இராஜயோகம். உலக பந்தனங்கள் எவ்வாறு உண்டாகின்றன? பின்னர் இப்பந்தனங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காக மனிதர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏன் பலனளிக்கவில்லை என்பது பற்றி பார்க்க வேண்டும்.

ஆரம்பத்தில் பேரின்ப வாழ்க்கையிலிருந்த காலம் மாறி வாழ்க்கை ஒரு போராட்டமாகவே இருப்பது தான் இன்றைய அனுபவமாக உள்ளது. வாழ்க்கையில் ஒரு சிறிது சுகமிருந்தாலும், மனதைப்பாதிக்கின்ற நிகழ்ச்சிகள் சூழ்நிலைகள், பிரச்சனைகள் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இதற்கான பரிகாரம் தேடி அவரவர் தத்தம் முறையில் வழிபாடுகள், பிரார்த்தனைகள், தீர்த்தயாத்திரைகள் போன்றவற்றை நம்பிக்கையோடு செய்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் நமக்கு என்ன வேண்டும்? எப்படிச் செய்து கொள்வது என்பதை தீர்மானிக்க முடியாமல், நம்மையறியாமலேயே, நாம் வெளியே வரமுடியாத ஒரு வலையை மேலும் மேலும் இறுக்கமாகவே பின்னிக் கொண்டிருக்கிறோம். சமுதாயப் பிரச்சனை என்பது தனி மனித உள்ளத்தில் தீர்க்கப்படா மலிருக்கின்ற குழப்பங்களேயாகும். ஆதலால் முதலில் இயல்பான மனித இயல்புகளுக்கேற்ற முறையில் குடும்பத்தை அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஒருபக்கம் உலக பந்தனங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணுகிறோம். அதே சமயம் நமது சுகத்தை மட்டுப்படுத்தவோ, விட்டுக் கொடுக்கவோ மனமில்லை. பொருட்களை மேலும் புதிது புதிதாக வாங்க நினைக்கிறோம். இதை நிறைவேற்றுவதற்காக பணத்தைத் தேடி அதிகமாக உழைக்கிறோம். அவசியமான

ால் குழந்தைகளை விட்டுவிட்டு இருவருமே கூட அலுவலகத்தை நோக்கிப் புறப்பட தயாராகிறோம். ஆரம்பத்தில் முன்னெச்சரிக்கையாகவும், தவிர்க்க முடியாமலும் இவ்வாறு நடந்து கொள்கிறோம். ஆனால் நாளடைவில் தேவையும், உழைப்பும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியடைந்து விடுகிறது. இவ்வாறாக இருவித வேலைப் பளுவின் காரணமாக சரியான ஓய்வும் கிடைப்பதில்லை. குழந்தைகளைப் போதிய அளவு பராமரிக்கவும் முடிவதில்லை. இதனால் குழப்பங்களும், அமைதியற்ற சூழ் நிலையும் உடலைப்பாதிக்கும் சூழ்நிலையும் உருவாகிறது. இதிலிருந்து விடுபட பொழுதுபோக்கு சாதனங்களை நாடுவதும் தேவையற்ற பழக்க வழக்கங்களுக்கு அடிமையாவதும் கூட தவிர்க்க முடியாத தாகிவிடுகிறது. மேலும் பணம், பொருள், அழகு அந்தஸ்து, மற்றவர்கள் மதிப்பை எதிர்பார்ப்பது போன்றவைகள் நிலையானவை அல்ல. மாறுதலுக்குட்பட்ட இதன் ஆதாரத்தில் அடையும் மகிழ்ச்சியும் அளவுக்குட் பட்டது மட்டுமல்லாமல் தற்காலிகமானதுமாகும். உதாரணமாக இன்று ஒருவருடன் மிக அன்பாக நடந்து கொள்ளும் நாம் நாளை அதைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போகக் கூடும் அல்லவா!

அனைத்து ஆத்மாக்களுக்கும் பரம தந்தையாக இருக்கின்ற பரமாத்மாவாகிய இறைவன் பரலோகவாசியாக (பிரம்ம லோகம்) இருக்கின்றார். மேலும் அதே லோகவாசிகளான அசரீரி ஆத்மாக்களும், இவர்கள் நடிப்பதற்காக கர்ம க்ஷேத்திரத்திற்கு வருகின்ற பஞ்ச தத்துவங்களடங்கிய பூலோகமும் நிரந்தரம். ஆதலால் இது முடிவிலா நாடகம். இந்த நாடகத்தில் பிரதான அங்கம் வசிப்பவராக இருக்கின்ற பரமாத்மா பிறவிக்கு அப்பாற்பட்டவராகவே இருப்பினும் ஒரே ஒருமுறை கடமையாற்றுவதற்காக பூலோக நாடக மேடையில் ஆத்மாக்களோடு நேர்முகமாக உரையாடுகின்றார். ஆனால் நாடகத்திற்காக சரீரம் தரித்துக் கொள்ளும் அசரீரி ஆத்மாக்களின் பங்கு தனிப்பட்ட வாழ்க்கைப் பயணமாக பூலோக நாடகமாக இருக்கின்றது. இந்த நாடகத்தின் சுவாரஸ்யமான அம்சம் சூட்சுமமானதாக இருக்கின்றது. அதாவது ஆரம்பத்தில் தங்கள் இருப்பிடமாகிய மேலோகத்திலிருந்து தங்கள் விருப்பம் போல் பூலோகத்திற்கு கீழிறங்கி வந்த ஆத்மாக்கள் நாடக முடிவில் திரும்பிச் செல்ல முடிவதில்லை. ஏனெனில் இங்கு வந்து நீண்ட காலமாகி விட்டது. பற்பல பிறவிகளும் எடுக்க வேண்டியதாகி விட்டது. ஆகவே எல்லாமே மறந்து போய்விட்டது. நாடகம் முடிந்து விட்டதென்பதோ, வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்பதோ தெரியவில்லை ஆதலால் இது பற்றியெல்லாம் நினைவு படுத்தும் ஒருவருடைய அவசியம் உண்டாகி விட்டது. இது மட்டுமல்லாது திரும்பிச் செல்லும் முன்பாக வரும்போது இருந்த தூய்மை நிலையை அடைய வேண்டுமென்பதும் இதில் உதவி செய்பவரும் வேண்டும். இத்தகைய இக்கட்டான வேளையில்தான் வேறெவரும் செய்ய முடியாத உதவியை பரமாத்மா தன் கடமையாகச் செய்கின்றார். இதற்காக பரமாத்மாவின் பூலோக வருகையே பகவான் அவதாரம் என அறிகிறோம். அப்போது பூலோக கர்ம க்ஷேத்திரத்தில் ஜீவாத்மாக்களுக்கும், பரமாத்மாவுக்கும் ஏற்படுகின்ற உண்மையான நேர்முக சந்திப்பும் சம்மந்தமும் அப்போது அவரிடமிருந்து பெறுகின்ற ஞானமும், சக்தியும் அளவற்ற அன்பும், கருணையும், பரிபாலனையும் பேரானந்த அனுபவமும் என்றென்றும் மறக்க முடியாத அழியாத பதிவுகளாக, நிலைத்து விட்ட ஒன்றாக நிச்சயிக்கப்படுகின்றது என்பது தெளிவாக இருக்கின்றது.

கடவுள் பிரபஞ்சத்தைப் பற்றிய அனைத்தையும் அறிந்தவர். ஆதலால் அவர்

வழிகாட்டுதலை மதித்து அவர் காட்டுகின்ற வழிப்படி நடப்பது நமது நன்மையின் பொருட்டேயாகும். கடவுளின் அன்பிலும் அவரது எல்லையற்ற கருணையிலும் மனிதனுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அவரது மனக் கதவுகள் எப்போதும் நமக்காக திறந்தே இருக்கின்றன. நாம் இப்பொழுது நமது கண்களை மூடிக் கொண்டால் மேலும் மேலும் தவறுகளைச் செய்வதும், அதன் விளைவுகளை அனுபவிப்பதும் தவிர்க்க முடியாததாகி விடும். இதற்காக நாம் வேறு யார் மீதும் பழி சுமத்த முடியாது. இதற்கு நாமே முழு பொறுப்பாளி என்பதை உணர வேண்டும். நம்மிடமுள்ள குறைகளையும், பலவீனங்களையும் நீக்கவும், அவரிடமிருந்து மேலான குணங்களை தன்னில் கொண்டு வரவும் வேண்டும். இதற்கு நம் மனதை அவரிடம் லயிக்கும் கலையே இராஜயோகம்.

இராஜயோகம் மதத்தைக் கற்பிக்க வில்லை. இது மனதையும் மனதின் மூலம் கர்மேந்திரியங்களை ஆத்மாவாகிய தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டுவரும் சக்தியைப் பெற உதவுகிறது. நமது ஆதி இயல்புகள் முற்றிலும் அழிந்து போய்விடவில்லை. நாம் ஏற்கனவே சாந்தியை அனுபவம் செய்திருக்கிறோம் எனவே அதை அனுபவம் செய்யவே விரும்புகிறோம். இவ்விருப்பத்தை பூர்த்தி செய்வதற்கான வழியே யோகமாகும். இதன் மூலம் ஏற்கனவே நம்மிடம் இருக்கின்ற பேரானந்த உணர்வை விழிப்படையச் செய்கிறோம் அவ்வளவு தான். இந்த இராஜயோகம் எனும் தியானத்தை சில குறிப்பிட்ட ஆன்மீக ஒழுக்க நெறி முறைகளைப் பின்பற்றி எவரும் செய்ய முடியும். பரமாத்மாவின் அவதாரம் இராஜயோகத்தைக் கற்பிப்பது தான் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் இதன் ஆதாரத்திலேயே நமக்காக சுகம் நிறைந்த சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கின்றார்.

## கிருஷ்ண ஜெயந்தி (பாட்டு)

பி.கு. ஜெயசங்கர், போடிநாயக்கனூர்

கிருஷ்ணா! சத்தியுகத்தின் இளவரசே
எல்லோருக்கும் இனியவனே!
உன் பிறப்பின் மகிமை பாடவே
நாங்கள் இங்கு கூடியுள்ளோம்!
கல்பம் முழுவதும் கொண்டாடும்
கிருஷ்ண ஜெயந்தி வாழ்க! வாழ்கவே!

புராணங்களின் நாயகனே!
நீ எடுக்கும் அவதாரங்கள்
காலத்தை கடந்து நிற்கும்
காவியமாய், கதைகளாய் - உன்
சாகசங்கள் காலமெல்லாம் பேசப்படும்

சத்தியத்தின் வெற்றியையே - உன்
அவதாரங்கள் உலகுக்கு பறைசாற்றும்
சத்திய தர்மங்கள் - உன்
மூலமே பேசப்படும்

வாழ்ந்து காட்டிய புருஷோத்தமா!
மனித குலத்தின் முன்னோடி நீ!
மாயையை வெல்லும் வழி தெரிந்தவன்
தேவனாகும் கலை கற்றவன்

எதிலும் முதல்வன் ஆனாய்!
எப்போதும் முதலிலே நின்றாய்
சிருஷ்டியின் முதலிலும் நீ
சிருஷ்டியின் முடிவிலும் நீ!

சங்கமயுக மூத்த சகோதரனே!
பகவானின் பாக்கிய ரதமே!
பகவானே உன்னுள் அமர்ந்தார்
உயர்ந்ததிலும் உயர்ந்த பாக்கியத்தை
நீயே எடுத்துக் கொண்டாய்

சத்திய ஞானம் கற்பிக்க நீயே ஆதாரமானாய்!
புது உலக படைப்பில் நீயே பிரம்மா ஆனாய்!




## உலகளாவிய நன்மையின் பொருட்டு
## பாரத நாட்டில் மீண்டும் ருத்ர ஞான யக்ஞம்

இனிமையான குழந்தைகளே!

நீங்கள் இப்போது ருத்ர ஞான யக்ஞத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள். இது மனிதனிலிருந்து தேவதையாவதற்கான யக்ஞமாகும். இந்த யக்ஞத்தைப் படைத்திருப்பது சிவபரமாத்மாவாகிய ருத்ரன் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த யக்ஞத்தில் குழந்தைகளாகிய நீங்களே உங்களை ஆஹுதியாக ஸ்வாஹா செய்கின்றீர்கள். நீங்கள் தான் இந்த யக்ஞத்தைப் பாதுகாத்தும் வருகின்றீர்கள். இன்றைய உலகம் தமோபிரதான நிலை அடைந்து விட்டது. இந்த நிலையில் மாற்றம் என்பது மிகமிக அவசியமானதாகும். இதனைத் தவிர்க்க முடியாது. இதுவும் நன்மைக்கே. இது தான் ராஜஸ்வ அஸ்வமேத அவிநாஷி ருத்ர ஞான யக்ஞம்

**பணிவுடமை இதயத்தை விசாலமாகவும், பரிசுத்தமானதாகவும் யோக்கியதையுள்ளதாகவும் ஆக்குகிறது, ஒவ்வொருவருடனும் உறவை எளிதாக்குகிறது, ஒத்துழைக்கும் மனப்பான்மையையும் ஊக்குவிக்கிறது.**

# ராஜசூய அசுவமேத அவினாஷி ருத்ர ஞான யக்ஞம்



ஒரு காலத்தில் அரசாண்ட மன்னர்கள் சக்கரவர்த்தி பட்டம் சூட்டிக் கொள்வதற்காக அசுவமேத யாகம் செய்தார்கள் என அறிகின்றோம். பண்டைய நூல்களில் யாகம் எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இருந்தன. இந்த விதிகள் விசித்திரமானவை. அதாவது யாகம் செய்வதற்கு கரு நீல வண்ணக் குதிரை (அசுவம்) ஒன்று வேண்டும். இக்குதிரையை யாக குண்டத்தில் (யக்ஞம்) மந்திரம் மற்றும் ஔஷதங்கள் மூலமாக அர்ப்பணித்து விட வேண்டும். இதனால் அக்குதிரை வேதனைப்படுவதில்லை, மாண்டு விடுவதுமில்லை. மாறாக புதிய சக்தி படைத்ததாகி மறுபிறவி எடுத்து விடுகிறது. பின்னர் இக் குதிரையை பூமண்டலம் முழுவதும் வலம் வரச் செய்கிறார்கள். இவ்வாறு வலம் வந்து கொண்டிருக்கும் போது வேறு நாட்டு எல்லையில் யாரேனும் இக்குதிரையைத் தடுத்து நிறுத்தினால், அந்நாட்டு மன்னருடன் போரிட்டு வெற்றி பெற வேண்டும். இவ்வாறு எல்லா நாடுகளையும் சுற்றி வந்த பிறகு விழா நடக்கிறது. இதற்கு எல்லா நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது. இவ்விழாவில் எல்லா மன்னர்களும் கலந்து கொண்டு அந்த நாட்டு மன்னரை தங்கள் சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொள்கிறார்கள். இதன் உண்மை தாத்பரியம் பற்றி அறிதல் அவசியமாகிறது.

யக்ஞத்தில் அர்ப்பணிக்கப்படுகின்ற குதிரையைப் பற்றி வர்ணிக்கையில், அது விநாடிக்கு 700 மைல் வேகத்தில் செல்லக்கூடிய தென்றும், இது தெய்வீகப்பிராப்தியும் அடைகிறது என்றும் கூறப்படுகிறது. இவ்வாறாக இந்த யக்ஞத்தைப்பற்றிய வர்ணனைகளைப் பார்க்கும் போது மனதில் பல கேள்விகள் எழுகின்றன. அதாவது இவ்வளவு அதிவேகமாகச் செல்லக் கூடிய குதிரை இருக்க முடியுமா? அவ்வாறானால் குதிரை வலம் வரும்போது இதனைப் பின் தொடர்ந்து வரும் ராஜப் பிரதிநிதிகள் மற்றும் வீரர்களின் கதி என்ன? மேலும் இதனைத் தடுத்து நிறுத்த முடியுமா? குதிரையை யக்ஞத்தில் அர்ப்பணிப்பது இம்சையாகாதா? குதிரைக்குத் தெய்வீகப்பிராப்தி கிடைக்க முடியுமா? தெய்வீகப்பிராப்தி கிடைக்கிறது என்றால் இதற்காக குதிரை என்ன புருஷார்த்தம் செய்தது? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்க வேண்டுமென்றால் இதன் உண்மைப் பொருளை அறிய முற்பட வேண்டும்.

ஆன்மீகக் கண்ணோட்டத்தில் அசுவம் (குதிரை) எனக்குறிப்பிடப்பட்டிருப்பது மனித மனம் ஆகும். மனோ வேகம் தான் குதிரையின் வேகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீய எண்ணங்களையுடைய சஞ்சலமுள்ள மனம் தான் கருநீல வண்ணக்குதிரை என வர்ணிக்கப்பட்டுள்ளது. என்பது தெளிவாகிறது. குதிரை மறுபிறவி எடுக்கிறது என்பதல்ல. மனம் தூய்மையடைவதன் மூலம் மனிதன் மறுபிறவி எடுக்கிறான் என்பதாகும். மனிதன், இக்கல்பத்தின் கடைசியில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற இப்பிறவியிலேயே மறுபிறவி எடுக்க வேண்டுமென்ற கருத்து கூறப்பட்டிருப்பது விளங்குகிறது. யக்ஞம் என்பதன் பொருள் தூய கர்மங்கள் (புண்ணிய கர்மம்) செய்தல் ஆகும். ஔஷதங்கள் என்பது உடலுக்கு அளிக்கின்ற தூய்மையான உணவையும், மந்திரம் என்பது ஈஸ்வரிய ஞானத்தையும், யாகம் வளர்ப்பது என்பது யோக அக்னியையும் குறிப்பதாக இருக்கின்றது. பரமாத்மா

அருளுகின்ற ஞானத்தின் அடிப்படையில் மனதை பரமாத்மா விடம் அர்ப்பணிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறுகின்ற தெய்வீக சக்தி எனும் அக்னி மூலமாக மனதிலுள்ள தீய சம்ஸ்காரங்களை பஸ்மம் செய்து தூய்மையாக்க வேண்டும். இவ்வாறு மனதில் ஆணிவேர் போன்று ஆழமாக இருக்கும் உள்ளுணர்வுகள் தூய்மையாகி விடும்போது, மனமானது உயர்வாக சிந்திக்க ஆரம்பிக்கிறது. இவ்வாறு மனதில் எழுகின்ற உயர் சிந்தனைகள் மூலம் நற்கர்மங்களைச் செய்து மனிதன் அமரத்துவம் அடைகிறான் என்பதே இதன் பொருளாகும்.

இந்த யக்ஞத்தைப் பற்றிய வர்ணனைகள், இப்போது இன்றைய சங்கமயுகத்தில் பரமாத்மா படைத்திருக்கின்ற ஞான யக்ஞத்தை நினைவு கூறுவதாக இருக்கின்றது. இந்த யக்ஞம் அவிநாஷி (அழிவற்றது) என்று கூறப்பட்டிருப் பதன் மூலம் இதற்கு முன்பும் இவ்வாறு படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது. கலியுகத்தின் இறுதியான இத்தருணத்தில் தான் பரமாத்மா யக்ஞத்தைப் படைக்கின்றார். ஏனெனில் கலியுக இறுதியில் தான் எல்லோருடைய மனமும் கருநீல வண்ணக் குதிரையைப் போல இருள் சூழ்ந்ததாக இருக்கின்றது. தமோபிரதான நிலையும், தர்மம் க்ஷீணமடைந்த நிலையிலும் இருக்கின்றது. அதாவது அதர்மம் மேலோங்கியும் இருக்கின்றது. ஆதலால் தர்மம் ஸ்தாபனை செய்ய வேண்டிய தருணம் கலியுகத்தின் இறுதியான நேரம் தான் என்பது தெள்ளத் தெளிவாகவும் தெரிகின்றது. இந்த யக்ஞத்தில் மனிதர் யாவரும் தங்களுடைய மனோ விகாரங்களான காமம், கோபம், போன்ற தமோ குண சம்ஸ்காரங்களை இறைவனிடம் அர்ப்பணித்து தூய்மையடைய வேண்டும். இது ஆன்மீகப் பரிவர்த்தனை (Spiritual Rejuvenation) . இவ்வாறு பழைய சுபாவங்களை யக்ஞத்தில் அர்ப்பணித்து தூய்மையடைவது என்பது மனிதன் தனது பழைய சுபாவங்களிலிருந்து புதிய சம்ஸ்காரங்களை உடையவனாக ஆகிவிடுகிறான் என்பதாகும். ஆதலால் இது மனிதனுக்குப் புதிய மறு பிறவி.

இவ்வாறு மறுபிறவி எடுக்கின்ற மனிதனே தேவனாகின்ற பாக்கியவானாகவும் ஸ்ரீ லக்ஷ்மி ஸ்ரீ நாராயணர் அரசாளுகின்ற சொர்க்க சாம்ராஜ்ய ஸ்தாபனை காரியத்தில் கருவியாகவும் இருக்கின்றான். அனைவருக்கும் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்ற சிவபரமாத்மா, பிரஜாபிதா பிரம்மா மூலமாக எந்த ஒரு ராஜசுய அசுவமேத அவிநாஷி ஞான யக்ஞத்தை மீண்டும் இப்போது ஸ்தாபனை செய்திருக்கின்றாரோ, அதனுடைய பெயர் தான் பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் என்பதை அறிவீர்களாக.

## நம்பிக்கை

நம்பிக்கை என்பது நன்றாக அறிந்து உணர்ந்து பராமரித்து வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒரு கலை. இதைப் பாதுகாத்துக்கொள்ள....

(1) வதந்திகளுக்கு செவி சாய்க்கக்கூடாது. இதற்குத் தானும் காரணமாகி விடக்கூடாது. ஊக்குவிக்கவும் கூடாது.

(2) அனுமானம் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

(3) அனுமானத்தின் அடிப்படையில் அபிப்பிராயம் உருவாக்குவதும் முடிவு செய்வதும் கூடாது.

(4) மாறாக உங்கள் உணர்வுகளை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். எல்லோருக்காகவும் சுபபாவனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இது தான் உங்களுடைய நம்பிக்கையின் அளவுகோல்.

# வாருங்கள், சுய தரிசன வலம் வருவோம்




விழித்திடுமின்
எழுந்திடுமின்
என்னைத்
தொலைந்து கண்ட
சேயெனவே
அழைக்கின்றார்
ஆலமுண்டான்
சிவன்.

தேவ தேவியர்களாக தூய தெய்வீக வாழ்க்கையில் இச்சை என்றால் என்னவென்றே தெரியா நிலை கடந்து நினைவு நனவாகும் சித்தி சொரூப நிலையையும் கடந்து, நோயற்ற வாழ்வு, குறைவற்ற செல்வமும், செழிப்பும் நிறைந்த இயல்பான சுக வாழ்வுக்குப் பின் மனித வாழ்க்கையில் நடந்ததும், நடப்பதும் தான் என்ன?

கால ஓட்டத்தில் துவாபரயுகத்தில் மனித ஜனத்தொகையின் அதிகரிப்பினால் வளங்களின் தூய்மையும் அளவும் தொடர்ந்து குறையத் தொடங்கியது. இக்காலத்தில் இயற்கையனர்த் தங்களின் மாற்றத்தினாலும் ஆத்மீக அறிவியல் தொழில் நுட்பம் மறைந்து அதனுடைய சாயலைக் கண்டு பல்வேறு மன்னர் காலத்தில் கற்களாலான சிற்பங்களை கொண்ட கட்டிடக் கலையின் கலாச்சாரமாக மாறியது. ஆனால் ஆகாய ஊர்திகள் சம்மந்தப்பட்ட தொழில் நுட்பங்கள் இக்காலத்தில் மறைந்து விட்டது.

அடுத்து கலியுகத்தில் மக்களின் விகார உணர்வு காரணமாக ஆத்மீக சக்தி மறையத் தொடங்கியது. அதனால் அவன் கடின உழைப்புச் செய்ய வேண்டியிருந்தது. அத்துடன் வசதிவாய்ப்புகளை தேடி அதற்கான ஆராய்ச்சிகளையும், கண்டுபிடிப்புகளையும் மேற்கொள்ளத் தொடங்கினான். இது விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டது. அதேவேளை ஆத்மீக அறிவு சக்தி குறைந்து கொண்டே சென்றது.

**பி.கு. பொன்னுசாமி நாகராஜா, இங்கிலாந்து**

பிரயாண வசதிகள் கொண்ட மோட்டார் வாகனங்களும் ஆகாய விமானங்களும் கட்டிட தொழில் நுட்ப அமைப்புகளும் உருவாகத் தொடங்கியது. இது உலகிய வளர்ப்பியல் அறிவியல் வளர்ச்சியான விஞ்ஞானம் உலக வாழ்க்கைக்கு பல்வேறு விதத்தில் பயனுடைய தாக இருந்தது. இதனால் மக்கள் ஓரளவு அமைதி சந்தோஷமான சுகமான தற்காலிகமான ஒரு வாழ்க்கையை கொண்டிருந்தார்கள். இறுதி நூற்றாண்டு காலத்தில் ஒரு ஆரம்பகாலம் இவ்வாறாக அறிவியில் வளர்ச்சி நல்ல முறையில் ஆக்கப்பூர்வமான முறையில் பயன்பாடாக இருந்த இதே வேளையில் மருத்துவத் துறையும் பல்கிப் பெருகியது.

முதல் மற்றும் இரண்டாம் உலக யுத்தங்களில் குறிப்பாக ஐப்பானில் ஏற்பட்ட அணுவாயுதங்களின் தாக்கம் இன்று வரை தொடர்கிறது. இத்தாக்கங்களின் அனுபவங்களை பெற்றிருந்த போதிலும் ஆத்மீக அறிவியல் சக்தி தொடர்ந்து குறைவடைவதனாலும் மனிதனுடைய அறிவு விஞ்ஞானத்தின் அறிவாக மட்டுமே தொடர்ந்து ஆராய்ச்சிகளும் அணு சக்திகளின் கண்டுபிடிப்பினாலும் தொலைத் தொடர்பு சாதனங்களின் கண்டுபிப்பினாலும் 3-வது உலக யுத்தத்தை ஒட்டி தமக்குள்ளே வலுவான ஆயுதங்களை குவித்து வைத்திருக் கிறார்கள். இவற்றைப்பற்றி சிந்திக்கப்போனால் இக்கண்டுபிடிப்புகள் ஒரு வினாடியில் உலகம் முழுவதிலுமுள்ள நாடுகளை அழிக்க வல்லதாக இருப்பதை அனைவரும் உணர்வார்.

## இயற்கை:

காலச்சக்கரத்தின் சத்யுகத்தில் பாரதம் பிரிவினையற்ற ஒரே நாடாக இருந்த காலத்தில் அனேக இயற்கை வளங்களை கொண்டிருந்தது.

இயற்கை வளங்களும் பஞ்ச தத்துவங்களும் முழு தூய்மையும் செழிப்பும் ஒத்திசைவும் உள்ள காலமாகவும் இருந்தது. அக்காலப் பகுதியில் உலகத்தின் ஒரே கண்டமாக இருந்த பாரதத்தில் இயற்கை வளங்களாகிய தங்கம், வெள்ளி, வைடூரியங்கள் சுரங்கங்களாகவும் தானியங்கள் காய்கறிகள் பழவகைகள் மற்றும் மூலிகைகள் போன்ற முடிவுறா வளங்களாகவும் இருந்தன. ஆறுகள், குளங்கள், நீரோடைகள் யாவும் தூய்மையும் செழிப்பும் பயன்படு தன்மையும் கொண்டிருந்தது.

இவ்வகையான வளங்களை தேவர் காலம் என அழைக்கப்படும் பொற்காலத்தில் வாழ்ந்த மக்கள் செழிப்பான முறையில் பயன்படுத்தி குறைவற்ற நிறைவான சௌகரீகமான இராஜ ரீக வாழ்க்கையை வாழ்ந்தார்கள். இதனால் அங்கு கடவுள் என்ற தேடலுக்கு இடமில்லாத வகையில் இயற்கையாக அமைந்திருந்த முடிவறா வளங்களின் செல்வச் செழிப்பிலும் திளைத்திருந்தார்கள்.

அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தெய்வீக குணங்களைக் கொண்டு பூஜிக்கத் தகுதி வாய்ந்த நிலையில் எண்ணம், சொல், செயல் அனைத்தும் தமக்கும் இயற்கைக்கும் பாதிப்பில்லாத நன்மை பயக்கக்கூடிய பாங்காக இருந்தது. இதனால் இயற்கையும் அவர்களுக்கு ஒத்தாசை வழங்கியதுடன் தத்துவங்களும் ஓர் சமநிலையான தன்மையைப் பேணிக் கொண்டிருந்தது.

தொடர்ந்த கால ஓட்டத்தின் வளர்ச்சியில் மக்கள் தொகை பெருக்கத்தினாலும் ஆத்மீக சக்தி குறைந்து வந்த தன்மையினாலும் மக்களின் எண்ணங்கள் சரீர உணர்வின் வயப் பட்டு விகார உணர்வுகளைத் தூண்டத் தொடங் கியது. இதனால் மக்களின் பழக்க வழக்கங்கள் இராஜரீகமாக வாழ்க்கை முறையிலிருந்து சாதாரண மனித வாழ்விற்கு வந்தது மட்டு மல்லாது தமக்கும் சூழலுக்கும் பங்கம் விளை விக்கத் தொடங்கியது. அதாவது மக்களின் எண்ணங்கள் விகார உணர்வுடையதாக இருந்ததால் இயற்கை வளங்களும் விகாரங்களை உள்வாங்கி தாமும் அவர்களைத் தூண்டுவதாக அமைந்தது. எண்ணம், சொல், செயல் அனைத்தும் இயற்கையை பாதிப்பதாகவே இருந்தது. குறிப்பாக தொடர்ந்த காலப்பகுதியில் இயற்கையின் தூய்மையற்ற தன்மையின் காரணமாக பெரும் ஆழிப்பேரலைகளையும், பூமியதிர்வுகளையும், எரிமலை வெடிப்பு, சூறாவளி, அதிக மழை வீழ்ச்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் தோன்றத் தொடங்கியது. இதன் காரணமாக அகண்ட ஒரே கண்டமாக இருந்த பாரதம் (உலகம்) பல கண்டங்களாக பிரியத் தொடங்கியது. இத்தகைய இயற்கைகளின் சீற்றத்தைக் கண்ட மக்கள் பஞ்ச தத்துவங் களையும் பயத்தின் காரணமாக அவற்றிற்கு மதிப்புக் கொடுத்து வழிபடத் தொடங்கினர். இடி இடிக்கின்ற பொழுதும், மின்னல் மின்னுகின்ற பொழுதும் காற்று வேகமாக வீசுகின்ற பொழுதும் இயற்கையின் தாக்கங்களுக்குப் பயந்து இத்தகைய இயற்கையை தெய்வங்களாக வழிபடத் தொடங்கினர்.

துவாபரயுகம் என அழைக்கப்பட்ட இக்காலப் பகுதியில் பக்தி மார்க்கத்தில் தத்துவங்கள் கடவுளாக பூஜிக்கப்பட்டு மதிப்பு கொடுத்திருந்த போதிலும் தொடர்ந்த கலியுகத்தில் தத்துவங்களையும் இயற்கையின் செழிப்பையும் தவறான முறையில் பயன்படுத்தத் தொடங்கினர். அதாவது நாகரீகமான வளர்ச்சியினாலும் தொழில் நுட்ப வளர்ச்சியினாலும் இயற்கையின் வளங்கள் பாதிப்பிற்குள்ளாகின. வெளிப்படையாகச் சொல்லப்போனால் அதிகளவில் மனிதன் காடுகளை அழித்தான். நிலத்தை மிக ஆழத்திற்கு தோண்டினான். போர்க்கால சூழ்நிலையில் இரசாயன வெடி பொருட்களின் பாவனையும் பரிசோதனையும் பாதிப்பை ஏற்படுத்தின. ஆறுகள் குளங்கள் உட்பட தேவையற்ற கழிவுப் பொருட்கள் நச்சுப்

பொருட்கள் கலக்க விடப்பட்டதால் அதனுடைய தன்மை சீர்குலைந்தது. அத்துடன் கடல்கள் சமுத்திரங்களில் கப்பல் போக்குவரத்தின் மூலமான எண்ணெய் கசிவுகளும் தொழிற்சாலை கழிவுகளும் ஏனைய கழிவுப் பொருட்களும் கலக்க விடப்படுவதனால் அணுக்கதிர் வீச்சுத் தாக்கத்திற்கு உட்படுவதனாலும் கடல் வளங்கள் பாதிப்பிற்குள்ளாகின.

இயந்திரமயமாக்கப்பட்ட இன்றைய கால கட்டத்தில் நவீன தொழில் நுட்ப சாதனங்கள் மற்றும் அணுவாயுத பாவனை காரணமாகவும் பெருமளவில் அசுத்தமான கார்பன்டை ஆக்ஸைடு போன்ற மாசுகளின் கலப்பினால் கோள் படலத்தில் துவாரம் ஏற்படவும் காரணமாக இருந்தது. இயற்கைக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த பாதிப்புகள் பூதாகாரமான தாக்கத்தை இன்றும் உண்டு பண்ணிக்கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் முழு தூய்மையும் செழிப்பும் ஒத்திசைவுமாக இருந்த தத்துவங்களும் இயற்கையும் இன்று தமோபிரதான நிலையை அடைந்து தூய்மையிழந்து முற்றிலும் சமநிலை குலைந்து இயற்கையின் அனர்த்தங்களான காலத்தின் குரலாக வெளிப்பட்டுக் கொண்டிருக் கின்றன. அதாவது நிகழ்காலத்தில் மழை வீழ்ச்சியை பொறுத்தளவில் ஓரிடத்தில் மிக அதிகமாகவும் அதாவது வெள்ளப்பெருக்காகவும் இன்னோரிடத்தில் அதிக வறட்சியாகவும் இருக்கிறது. அடிக்கடி ஏற்படும் ஆழிப்பேர லைகளும் பூமியதிர்வுகளும் பேரழிவுகளை ஏற்படுத்துவதுடன் மக்களிடையே பயமும் பீதியுமான காலத்தை ஏற்படுத்தி யிருக்கிறது.

புற ஊதாக்கதிர்களின் தாக்கம் குறிப்பாக ஓசோன் துவாரம் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இத்தகைய விளைவுகள் மக்களின் உடல் நலக் குறைவிற்கும் காரணமாகிறது. இன்றைய காலப்பகுதியில் இவையாவும் நாம் கேட்கும் காலத்தின் குரலேயாகும். உலக மாற்றத்தை எதிர்கொள்ள வேண்டியதும் தயாராகும் தன்மைக்கு மணியடிப்பதாகவே அமைகிறது.

இவ்வாறு விஞ்ஞானத்தாலும், இயற்கை யாலும், தேக அபிமானத்தின் காரணமாக ஏற்படும் விகாரங்களினாலும் துக்கத்திற்கும், கஷ்டங்களுக்கும் தள்ளப்பட்ட மனிதர்களை ஆன்மீக சக்தி தான் உதவி செய்யும் என்றும் இதற்கு கடவுள் வருவார் என்ற நம்பிக்கையும் அனைத்து தர்மங்களும் எதிர்நோக்கிக் கொண்டு தான் இருக்கிறது. ஆன்மீக சக்தி என்பது சத்தியயுகத்தில் எவ்வாறு இருந்தது, இப்பொழுது மறுபடியும் அந்த நிலையை எவ்வாறு அடைய வேண்டும் என்பதை அடுத்த இதழில் பார்பபோம்..... (தொடரும்)

## மன்னிக்கவும்

ஏதாவது தவறு செய்து விட்டால் உடனே மன்னிக்கவும் (Sorry) என்று சொல்லி வருத்தம் தெரிவிக்கிறோம். இது ஒரு நல்ல குணம். ஆனால் அதே தவறு மீண்டும் நேர்ந்து விட்டால் மன்னிக்கவும் என்ற சொல் அர்த்தமற்றதாக, விலை மதிப்பற்றதாக, வீணாக்கப்பட்ட சொல்லாக ஆகிவிடும். இவ்வாறு நாமே நமது சொல்லுக்கு மதிப்பளிக்காதபோது, நமது சொல்லுக்கு பிறரிடம் என்ன மதிப்பு இருக்க முடியும்? பேசுவது சுலபம். ஆனால் அவை பயனற்றதாக, பின்னர் பச்சாதாபப் படக்கூடியதாக இருந்தால் என்ன பயன்? கால தாமதம் ஏற்படும் போது, கவனமின்றி பேசி விடும் போது, மறதியின் போது இத்தகைய சிறுசிறு தவறுகள் சர்வ சாதாரணமாக ஏற்படுவதும் அதற்காக மன்னிப்புக் கேட்பதும் நடைமுறையில் இருந்து வரும் பழக்கம். இது தொடர்கதை ஆகாமலிருக்க மன்னிக்கவும் எனும் சொல் உள்ளபூர்வமானதாக இருத்தல் அவசியம். இதனால் தவறு தவிர்க்கப்பட்டு விடும்.



## ஞான கீதம்

இத்தீபாவளி திருநாளில்
இரு புருவ மத்தியில் ஆன்ம
அகல் விளக்கேற்றுவோம் வாரீர்!

இந்த உடல் எனும் அகலின்
ஒளியைத் தூண்டுவோம் வாரீர்

ஆன்மீக ஞானமெனும் நறு நெய்யும்
இறைவன் பால் நாம் கொள்ளும்
எல்லையிலா அன்பு நினைவுத்
திரியும் போதும்
மனம் ஒளிவிட்டு வழிகாட்டும்
தூய்மை, சாந்தி, அன்பு, ஆனந்தம்
நம் பிறப்புரிமையாகும்.

நம் மூன்றாம் கண் திறக்கும்
நாம் வாழும் புருஷோத்தம் சங்கமயுக
தனி சிறந்த காலம் உணர்த்தும்

இறைவனின் கருணையால் நாம் பெற்ற
இப்பேற்றினை பிறரும் பெற்றிட
விழைந்தோங்கிடும் மனம்
செயலில் இறங்கிடும் ஐம்புலன்.

அனைவரது நெற்றியிலும்
நான் ஒரு ஆன்மா எனும்
ஆன்ம ஒளியைப் பிரகாசிக்கச் செய்திட
இவ்வுலகையே ஒளி வெள்ளத்தில்
ஆழ்த்திட அழைக்கின்றோம் வாரீர்!

சிவஞான கங்கையில் புனித நீராடி
புது உடல் எனும் புத்தாடை
அணிவோம் வாரீர்!

பொன்னுலகம் சேர்வோம் வாரீர்!
இன்றில்லையேல் என்றுமில்லை
விரைந்தோடி வாரீர்! வாரீர்!!

## விவேகம்

அறிவாளியாக இருக்கின்ற ஒருவர் தனது மனதை எப்படி போஷிப்பது (ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது) என்பதை அறிந்தவராக இருக்கின்றார்.

தினந்தோறும் நேரம் தவறாமல் உடலுக்கு உணவளித்து ஆரோக்கியமாக வைத்துக் கொள்கிறோம். எப்போதாவது போதுமான உணவு அளிக்கவில்லை என்றால் உடனே வயிறு பசிக்கிறது என்று உணருகிறோம். ஆனால் ஆன்மீக ரீதியாக மனதிற்கும் போஷாக்கு அவசியம் என்பதை உணர்ந்திருக்கிறோமா? ஒருவேளை மனம் போஷாக்கு இல்லாமல் பலவீனமாக ஆகிவிட்டால் எதிர்பாராமல் வரும் வெளி சூழ்நிலையின் பாதிப்புக்களைத் தாங்க முடியாமல் போய்விடக்கூடும். **மனன சக்தி தான் மனதிற்கான போஷாக்கு**

மன ஆரோக்கியத்திற்காக தினந்தோறும் நல்ல விஷயங்களைப் பற்றிப் படிக்கலாம். அல்லது நல்ல விஷயங்களைக் கேட்கலாம். இதனால் மனம் மகிழ்ச்சியடைவதை உணர்கிறோம். இம்மாதிரியான பழக்கம் மனதை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு உதவுகிறது. மேலும் மற்ற நேரங்களில் இன்றைக்கு என்ன தெரிந்து கொண்டோம் என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கும் பழக்கம் அவசியம். இதன் மூலம் எதிர்மறையான அல்லது மனதை பாதிக்கக் கூடிய சூழ்நிலை எதுவானாலும் சுலபமாகவே எதிர் கொள்ளும் சக்தியுடையதாக இருக்க முடியும்.

# தீப ஒளித்திருநாள்




தீபாவளி நமது விசேஷமான பண்டிகை. நம் நாட்டில் கொண்டாடப்படுகின்ற பண்டிகைகளிலெல்லாம் மிக விமரிசையாகக் கொண்டாடும் பண்டிகை தீபாவளி. ஆண்டு தோறும் கொண்டாடும் பண்டிகை தான். மீண்டும் இவ்வாண்டு கொண்டாடுகிறோம். ஆயினும் நாம் கொண்டாடும் இந்தப் பண்டிகை உண்மையான தீபாவளி அல்ல. ஏனெனில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சங்கமயுகத்தை அடுத்து வரவிருக்கும் சத்யுகத்தில் கொண்டாடவிருக்கும் தீபாவளி தான் உண்மையான தீபாவளி. ஆதலால் நாம் இப்போது கொண்டாடும் இந்தப் பண்டிகை, அதன் ஞாபகார்த்தமேயாகும். காலம் மாறும், மாறிக்கொண்டே தான் இருக்கும். இதேபோல வாழ்க்கை அனுபவங்களும் கூட இதுபோலவே தான். ஏனெனில் விசித்திர நாடகம், விந்தையான கதா பாத்திரங்கள். சுவாரஸ்யமான அனுபவங்கள், சூட்சுமத்தில் சுகமளிக்கும் சூத்திரதாரி. எனினும் நாம் தீபாவளிப் பண்டிகையை எப்படிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்? எப்படிக் கொண்டாட வேண்டும்? என்பதை சற்றே மீண்டும் நினைவு கூர்வோமாக!

தீபாவளி பண்டிகையை நாம் எல்லோருமே கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கிடையேயும், அவரவர் நிலை மற்றும் விருப்பத்திற்கேற்ப கொண்டாடுவது கண்கூடு. பண்டிகை நாள் நெருங்க, நெருங்க சிறுவர் முதல் முதியோர் வரையிலும் இதைப்பற்றிய சிந்தனை மற்றும் பேச்சாகவே இருந்து கொண்டிருக்கும். கடைகள், தெருக்கள், வாகனங்களில் நிரம்பி வழியும் மக்கள் கூட்டம், இரைச்சல், நெரிசல், காதைச் செவிடாக்கும் பட்டாசுகள், வாயு மண்டலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் வெடியின் நெடி.

இவ்வாறாக ஆண்டு தோறும் கொண்டாடும் பண்டிகையின் பின்னணி பற்றிய புராணக் கதைகள் பல உண்டு. இவற்றில் பிரசித்தமாக இருப்பது ஸ்ரீ இராமர் 14 ஆண்டு காலம் வனவாசம் முடித்து அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டம் சூட்டியதன் ஞாபகார்த்தம் என்பதாகும். இதைப் பற்றியெல்லாம் பொது மக்கள் சிந்திப்பதுமில்லை. கவலைப்படுவதுமில்லை. என்றாலும் ஸ்ரீ இராமர் வனவாசம் செல்ல வேண்டியதன் காரணம் என்ன? வனவாசம், போராட்டம் முடிந்து திரும்பி வந்து சுகமாகச் சேர்ந்தது வரை என்னவெல்லாம் நடந்தது என்பது இராமாயணம். இந்தக் காவியம் ஒரு புறம் இருக்கட்டும். எனினும் தீபாவளி ஒளித்திருநாளாகக் கொண்டாடப்படுவதற்கான தாத்பரியம் ஒன்று இருக்கத்தான் வேண்டும். மனிதன் அவனது குணாதிசயங்களின் அடிப் படையில் பூஜிக்கத்தக்க தேவதையாகவும், பூஜிக்கும் அதாவது பக்தி செய்கின்ற சாதாரண மனிதனாகவும், அசுரனாகவும் கூட இருக்கின்றான் என்பதை நாம் அறிவோம். குணாதிசயம் என்பது நன்மையளிக்கக் கூடியதாகவும், சுபம் மற்றும் மங்களகரமான தும், ஆக்க பூர்வமானதாகவும் இருப்பது அல்லது தீய குணம் விகாரம் எனவும் வழக்கில் இருந்து கொண்டிருக்கிறது.

இதனடிப்படையில் நாளடைவில் விகாரங் களின் பிடியில் சிக்குண்டு தன்னொளியிழந்த மனித ஆத்மாவானது ஞானத்தால் விழிப்புணர்வு பெற்று சுயம் பிரகாசமாகி தன்னை விடுவித்துக் கொள்கிறது என்பதாகும். அதாவது ஆத்மா தனது சொந்த அம்சங்களான தூய்மை, குணம், சக்தி அனைத்தையும் அடையப்பெற்று இராஜ்ய பரிபாலனைக்குரிய அதிகார அந்தஸ்தை

அடைந்து விடுகிறது - இதைத் தான் பட்டம் சூட்டிக் கொள்வதாக கூறப்பட்டுள்ளது.

இதேபோன்று தீபாவளிப்பண்டிகை தினத்தன்று மக்கள் செய்கின்ற பலவிதமான சடங்குகளுக்கும் உண்மை தாத்பரியம் உண்டு. உதாரணமாக வீட்டைச் சுத்தம் செய்து, வர்ணம் பூசுதல், ஆத்மாவை ஞானம் மற்றும் யோக சக்தியின் மூலம் தூய்மைப்படுத்துவதாகும். புத்தாடை அணிதல், தூய்மையாகி விட்ட ஆத்மாவுக்குப் பொருத்தமான ஆரோக்கிய சரீரம் எனும் ஆடை தரித்தலாகும். இனிப்பு வழங்குதல் பிறருடன் இனிய முறையில் அன்பை பகிர்ந்து கொள்வதாகும். ஒருவருக்கொருவர் நல்வாழ்த்துக் களைத் தெரிவிப்பதும், செல்வச் செழிப்புடன் சுக வாழ்க்கை வாழ வேண்டும் என்ற தனது நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்துதலாகும்.

மேலும் புதுக்கணக்குத் துவங்கும் வழக்கமும் உண்டு. இதன் பொருள் இதுவரை யிலும் தன்னிடமிருந்த வேண்டாத கர்மக் கணக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து புண்ணிய கர்மக்கணக்கைத் துவங்குவதற்கு ஒப்பாகும். தீப அலங்காரங்கள், ஆத்மாக்கள் விழிப்புணர்வு பெற்று பிரகாசமாக ஜொலிப்பதை நினைவூட்டும் குறிப்பாகும். முக்கிய விசேஷமாக அன்றைய தினம் ஸ்ரீ லக்ஷ்மி பூஜை செய்து தீபாராதனை மூலம் ஆவாஹணம் செய்வது மேலும் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணர் அரசாளும் பொற்காலத்தை தீப அலங்காரங்களுடன் ஸ்தூலமாக ஒளித்திருநாளாக கொண்டாடி மகிழ்ச்சியுடன் வரவேற்பதற்கொப்பாகும். மேலும் தீபாவளி தினத்தன்று கடையாயினும், வீடாயினும் விசேஷ தீப அலங்காரம் செய்வதன் இரகசியம் என்ன?

(1) வாழ்க்கை நல்வழியைப் பின்பற்றிச் செல்வதாக இருக்க வேண்டும்.

(2) தான் ஒரு அழிவற்ற, பிரகாசிக்கும் ஆத்மா என்ற விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

(3) தீயவைகளின்றும் பாதுகாக்கப்பட வேண்டும்.

(4) தீயவைகளின் மீது வெற்றி கண்டு மறுமலர்ச்சியையும் மகிழ்ச்சியையும் அனுபவம் செய்ய வேண்டும் என்பதாக இருக்கின்றது.

பொதுவாக விளக்கேற்றும் மாலை வேளையில் ஒளியை வணங்கும் வழக்க முள்ளது. இது விழிப்படைந்த ஆத்மா, புனித மாகியிருப்பதன் காரணமாக வணங்குதற்குரிய தாகின்றது என்பதைக் குறிப்பதாகும். மேலும் வணங்குபவர் தானும் அத்தகைய வணக்கத் திற்குரிய தூய நிலையை அடையப் பெற வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் குறிக்கோளாகக் கொள்வதுமாகும். இவ்வாறாக, ஸ்தூல ரீதியாக அனுசரிக்கும் நமது காரியங்கள் அனைத்துமே ஆன்மீக இரகசியத்தை உள்ளடக்கிய ஒன்றாகவே இருக்கிறது என்பதை அறிகின்றோம்.

### ஸ்ரீ லக்ஷ்மி - தன தேவி

ஸ்ரீ லக்ஷ்மியை தன தேவியாகப் பாவித்து, விளக்கேற்றி, பூஜை செய்து ஸ்ரீ லக்ஷ்மி கடாட்சம் (கண் பார்வை) வேண்டி வரவேற் கின்றோம். உண்மையில் நாம் எப்போது ஆத்ம விழிப்புணர்வு பெறுகின்றோமோ, ஆத்ம பரிசுத்தம் அடைகின்றோமோ மனதை கோயிலாக்குகின்றோமோ, அப்போது தான் ஸ்ரீ லக்ஷ்மி பூமியில் தோன்றுவாள். ஸ்ரீ லக்ஷ்மி நாராயணருடைய மகுடாபிஷேகம் நடைபெறும். அப்போது தான் ஒவ்வொரு வீட்டிலும் தீபாவளிக் கொண்டாட்டம் ஆரம்பமாகும். தசரா முடிந்த பின்னரே திபாவளி கொண்டாடப் படுவதன் பொருள் பத்து விகாரங்கள் எனும் அசுர குணங்கள் மடிந்த பின்னரே தெய்வீக அம்சங்கள் உயிர்த்தெழும், மலரும் என்பதாகும்.

ஸ்ரீலக்ஷ்மி என்ற சொல் லக்ஷியத்திலி ருந்து வந்தாகும். அதாவது ஸ்ரீ லக்ஷ்மியாக ஆக வேண்டும் என்ற உன்னத லக்ஷியத்தைக் குறிப்பதாகிறது. லக்ஷம் என்பது நூறாயிரங்கள்.

இந்த அளவு தனத்தையுடையவள் லக்ஷாதிபதி யாகக் கருதப்படுகின்றார். ஸ்ரீ லக்ஷிமியை வரித்த ஸ்ரீ நாராயணா் ஸ்ரீ லக்ஷிமிபதி என அழைக்கப்படுகின்றார். என்றாலும் தனம் மட்டுமே ஸ்ரீ லக்ஷிமிக்குச் சொந்தமானது என்பதல்ல. ஸ்ரீலக்ஷிமிக்கு இன்னும் பல சிறப்புகள் உண்டு. இவற்றைக்குறிக்கும் பலவகை சின்னங்கள் மூலம் அலங்காரம் செய்யப் படுவதைப் பார்க்கின்றோம். இவையனைத்துமே ஆத்மாவின் லக்ஷணங் களாகும். இதனை அலங்காரங்கள் மூலமாக நினைவு படுத்திக் கொண்டிருக்கிறோம். மேலும் ஸ்ரீ லக்ஷிமிக்கு நான்கு கைகள் காட்டப் பட்டுள்ளன. இவை நான்கில் ஒரு கை தூய்மையின் அடையாளம். இதை **தர்மா - (Purity)** என்கிறார்கள். இரண்டாம் கை குறை வற்ற செல்வச் செழிப்பைக் குறிக்கின்றது. இது **அர்த்த் - (Prosperity)** என்கிறார்கள். மூன்றாவது கை தெய்வீகக் கலையைக் குறிக்கும் **கர்மா - (Perfection)** என்பதாகும். நான்காவது கை **முக்தி - (Liberation)** என்பதாகும். அதாவது எல்லாவித பந்தனங்களிலிருந்தும் விடுபட்டிருப் பதைக் குறிக்கும். மேலும் அடைய வேண்டிய அனைத்தையும் அடைந்து விட்டதன் அடையாளமுமாகும். அதாவது ஆரோக்கியம், **- (Health)** செல்வம், **- (Wealth)** குணம் **- (Virtue)** மற்றும் ஆனந்தம் **- (Happiness)** இவையனைத்தும் இதிலடங்கும்.

மேலும் ஸ்ரீ லக்ஷிமி நூறு இதழ்களை யுடைய செந்தாமரை மலரில் நின்ற கோலத்திலும், அமா்ந்த நிலையிலும் சித்தரித்திருப்பதைக் காண்கின்றோம். இதன் பொருள் நூறு சதவிகிதம் (சம்பூரண சம்பன்னத்தைக் குறிக்கும். அடுத்து, ஸ்ரீ லக்ஷிமியின் கைகளிலிருந்து பொற்காசுகள் கொட்டுவதாகக் காட்டப்பட்டுள்ளது. இதன் பொருள் அனைவருக்கும் வாரி வழங்கும் வள்ளல் தன்மையும், வற்றாத செல்வச் செழிப்புடைமையைக் குறிப்பதாகும்.

மேலும் நான்கு யானைகள் தங்கக் கலசத்தின் மூலம் ஸ்ரீ லக்ஷிமி மீது நீர் வார்ப்பதாகக் காட்டப்படகிறது. இதன் இரகசியம் நான்கு யானைகள் நமது சித்தாந்தத்தின்படி நான்கு திசைகளைக் குறிப்பதாகும். அதாவது நாலாபுறத்திலுமுள்ள பிரஜைகள் அனை வரும் பண்புடையவா்களாகவும், எஜமான விசுவாச முடையவா்களாகவும் இருக்கின்றனா் என்பதைக் குறிக்கும் அடையாளம். அதாவது உலக மனைத்துமே தனது அருளாட்சியின் கீழ் செழிப்பாக உள்ளது என்பதைக் சுட்டிக் காட்டுவதாக சித்தரித்துள்ளார்கள்.

ஆதலால் நாம் தீபாவளித் திருநாளை, இந்த ஆன்மீக இரகசியங்களை மனதில் கொண்டு கொண்டாட வேண்டும் என்பதைப் புரிந்து கொள்கிறோம். இவ்வாறாகக் கொண்டாடுவோ மேயானால் நமது வாழ்வு சீரும், சிறப்பும் பெற்று ஒளிமயமாக இருக்கும் என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை. **தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

## திட்டமிட்ட குடும்பமும், மன உளைச்சலற்ற வாழ்வும்

ராக்கெட் வேகத்தில் விரைந்து செல்லும் தற்கால வாழ்க்கையில் தினமும் நாமடையும் மன உளைச்சலும், மன அழுத்தமுமே நமது ஆரோக்கியத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் முதல் எதிரியாக உள்ளன. இது அநேகவிதமான நோய்களுக்கும் காரணமாகவும் இருக்கின்றன. இது பற்றி சிந்தனை செய்வது மிக அவசியமாகிவிட்டது. இதன் மூலம் திட்டமிட்ட குடும்பம் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதற்கு தாமரை மலர் போன்று பற்றற்று புனிதமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.



**திண்டுக்கல்:** நகர மேயர் மாண்புமிகு மருதநாயகம் அவர்களுக்கு ராக்கி அணிவக்கின்றார் பி.கு. ராணி உடன் பி.கு. சிவா



**மதுரை:** தேனி மாவட்ட M.P, R. பார்த்திபன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் மதுரை துணை மண்டல பொறுப்பாளர் பி.கு. மீனாட்சி உடன் பி.கு. உமா



**ஈரோடு:** காவல்துறையை சார்ந்த அலுவலர்களுக்கு ராக்கி அணிவிக்கப்பட்டது.



**மதுரை:** Dr. APJ அப்துல்கலாம் அவர்களுக்கு நினைவாஞ்சலியில் கலந்து கொண்டார் பி.கு. இரமேஷ்ஜி, மதுபன்



**திருப்பூர்:** கிருஷ்ணஜெயந்தி விழாவில் குழந்தைகளுடன் பி.கு. ரேணுகா பி.கு. ஜெகஜோதி



**வண்ணாரப்பேட்டை:** வியாபாரிகளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பயிற்சி அளிக்கின்றார் பி.கு. ஜான்சி,



**திருப்பூர்:** பள்ளி ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட இராஜயோக பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் உடன் பி.கு. ஜெகஜோதி



**அடையார்:** மதுபனில் நடந்த பல்வேறு துறையை சார்ந்த VIP கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்களுடன் பி.கு. முத்துமணி



**திருவள்ளூர்:** நவராத்திரியை முன்னிட்டு தேவிகளின் தத்ரூப காட்சி விநாயகர்கோவிலில் நடத்தப்பட்டது



**திருவள்ளூர்:** தேவிகளின் தத்ரூப காட்சியினை கண்டு களிக்கும் பக்தகோடி மக்கள்



**கும்பகோணம்:** ஊரக வளர்ச்சி மற்றும் கிராம நல வளர்ச்சி பேரணி துவக்க விழாவில் நகர பிரமுகர்களுடன் பி.கு. ஞானம்



**தஞ்சாவூர் (ரெட்டிபாளையம்):** விவசாயிகளை வல்லமைப்படுத்தும் அகில இந்திய பேரணியினர் விவசாயிகளுக்கு ஊக்கம் உற்சாகம் அளிக்கின்றனர்



**தஞ்சாவூர் (மனோஜ்பட்டி):** விவசாயிகளை வல்லமைப்படுத்தும் அகில இந்திய பேரணியினர் விவசாயிகளுக்கு ஊக்கம் உற்சாகம் அளிக்கின்றனர்.



**ஊட்டி:** ரக்ஷாபந்தன் விழாவில் திரு. பால்ராசு, IAS, திரு. Dr. சுந்தரம், திரு. L. சாந்திலால் மற்றும் பி.கு. இராஜேஸ்வரி



**தர்மபுரி:** மூத்த குடிமக்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பயிற்சி அளிப்பவர் Dr. பி.கு. மகேஷ் (மதுபன்), Dr. பிரபாகர், வேலூர்




**தேனி:** முக்கிய விருந்தினர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. ஞானம் (தஞ்சாவூர்) உடன் பி.கு. சங்கர்

# ரக்ஷா பந்தன் விழா காட்சிகள்



**சிவகங்கை:** திரு. P.R. செந்தில்நாதன் M.P. அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. விமலா



**கடலூர்:** திரு. விஜய்குமார் SP அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. பீனா



**ஈரோடு:** மாவட்ட சார்பு நீதிபதி அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. கலையரசி



**திருப்பத்தூர்:** திரு. D சுந்தரநாதன், மாநில தலைவர், தேசீய மனித உரிமை கழகம் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. பாண்டி அபர்ணா, சென்னை.



**தர்மபுரி:** வீட்டு உபயோகப் பொருட்கள் கண்காட்சி திடலில் இராஜயோக தியான அரங்கத்தை திறந்து வைப்பவர்கள்: பி.கு. பாக்கியா, திரு. கிருஷ்ணன், பி.கு. லலிதா



**கோயம்பத்தூர்:** மாண்புமிகு அமைச்சர் S.P. வேலுமணி அவர்களுக்கு ராக்கி அணிவித்தபின் உடன் பி.கு. கௌதமி, பி.கு. கவிதா



**ஈரோடு:** பாராளுமன்ற உறுப்பினர் திரு. செல்வகுமார் சின்னையன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சபிதா



**சிவகங்கை:** திருப்பத்தூர் நகராட்சி தலைவி திருமதி கஸ்தூரி நாகராஜன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. விமலா



**ஊட்டி:** பாராளுமன்ற உறுப்பினர் K.R. அர்ஜுனன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. இராஜேஸ்வரி



**கடலூர்:** புதிய கட்டிடத்திறப்பு விழாவில் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. பீனா, சென்னை, உடன் பி.கு. அம்புஜா, பி.கு. வீரமணி, திருமதி கோமதி சிவலிங்கம் ஊராட்சி மன்றத் தலைவி



**திண்டிவனம்:** புதிய கிளை நிலைய திறப்பு விழாவில் உரை நிகழ்த்துகின்றார் பி.கு. பீனா, மேடையில் ஜெயின் சுவாமி சித்தரம்பூர், பி.கு. தேவி மற்றும் முக்கிய சகோதரர்கள்

# ரக்ஷா பந்தன் விழா காட்சிகள்



**திருவனந்தபுரம்:** மாண்புமிகு அமைச்சர் திரு. கே. பாபு அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. மினி



**தூத்துக்குடி:** கார்ப்ரேஷன் ஆய்வாளர் திருமதி பூங்கொடி அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. அருணா



**திருப்பூர்:** மாவட்ட ஆட்சியாளர் திரு. கோவிந்தராஜ் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு.ஜெகஜோதி



**ஊட்டி:** திருமதி சத்தியபாமா அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சரஸ்வதி



**நாகர்கோவில்:** மாவட்ட ஆட்சியர் திரு. சட்சின் சிங் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. கோகிலா



**நாகர்கோவில்:** திரு. மணிவன்னன், காவல்துறை அதிகாரி அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. கோகிலா



**மறைமலைநகர்:** TJS Engg கல்லூரியில் இராஜயோக பயிற்சியினை துவக்கி வைத்தபின் திரு. MGK கோபிகண்ணன் Chairman, உடன் பி.கு. பழனியம்மா



**கிருஷ்ணகிரி:** திரு. அசோக்குமார் MP அவர்களுக்கு புனித ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. ஸ்ரீராதம்மா உடன் பி.கு. லதா




**சிதம்பரம்:** ரக்ஷா பந்தன்விழாவில் பி.கு. செந்லி தாமரை, சகோ. மாண்புமிகு J. ராதிகா, சார்பு நீதிபதி, சகோ. மீனா, காவல்துறை ஆய்வாளர், சகோ. ராமனாதன், சகோ. சேதுராமன்



**விருத்தாச்சலம்:** மாவட்ட கூடுதல் நீதிபதி மாண்புமிகு ஜெ. செல்வநாதன் அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. சீதா



**கோவில்பட்டி:** திரு. கடம்பூர் ராஜு MLA அவர்களுக்கு ராக்கி அணிவிக்கின்றார் பி.கு. மீனாட்சி



**ஊட்டி:** ஊட்டிக்கு விஜயம் செய்த சகோதரி பி.கு. பீனா அவர்களை கௌரவிப்பவர் பி.கு. இராஜேஸ்வரி

# தூய்மை [சிறுகதை]

பி.கு. பாலாஜி, புதுக்கோட்டை



சிவபுரம் என்ற கிராமத்தில் வயதான பெரியவர் ஒருவர் எப்பொழுது பார்த்தாலும் தன்னுடைய வீட்டு வாசலில் அமர்ந்தபடி பகவத் கீதையை படித்துக் கொண்டே இருப்பார். சுப்பிரமணி என்ற இளைஞன் ஒருவன் பல நாட்களாக இதனை கவனித்துக் கொண்டே இருந்தான். ஒரு நாள் சுப்பிரமணி அந்த பெரியவரிடம் வந்து "**தாத்தா** எப்பொழுதும் இந்த புத்தகத்தையே படித்துக் கொண்டிருக்கிறீர்களே, இதை எத்தனை நாட்களாக படிக்கிறீர்கள்?" என்று கேட்டான். "ஒரு ஐம்பது ஆண்டுகளாக படித்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார் பெரியவர். "அப்படியென்றால் இந்த புத்தகம் உங்களுக்கு மனப்பாடம் ஆகியிருக்குமே, திரும்பவும் ஏன் படிக்கிறீர்கள்" என்று பதில் கேள்வி கேட்டான்.

"எனக்கு ஒரு சிறிய உதவி செய்வாயா? உன் கேள்விக்கு நான் பிறகு பதில் அளிக்கிறேன்" என்று கேட்டார் அந்த பெரியவர். "என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டான். பெரியவர் ஒன்றும் பேசாமல் பக்கத்திலிருந்த மூங்கில் கூடையை எடுத்தார். அதில் அடுப்புக் கரி இருந்தது. அதை ஒரு மூலையில் கொட்டினார். பல நாட்களாக அந்த கூடையில் அடுப்புக் கரி இருந்ததால் அதன் உட்புறம் கருப்பாகவே மாறியிருந்தது. "தம்பி, அதோ அங்கிருக்கும் பைப்பில் இருந்து இந்த கூடையில் சிறிது தண்ணீர் எடுத்து வா" என்று கூறினார். நான் கேட்ட கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? என்று நினைத்த சுப்பிரமணிக்கு சிரிப்பு வந்தது. இருந்தாலும் பெரியவர் கூறி விட்டார் என்பதற்காக கூடையை எடுத்துச் சென்று தண்ணீர் நிரப்பி எடுத்து வந்தான். ஆனால் அவன் வந்து சேர்வதற்குள் கூடையிலிருந்த எல்லா தண்ணீரும் ஒழுகிப் போனது. "இன்னும் ஒருமுறை எடுத்து வா" என்று பெரியவர் கூறினார். இளைஞன் மீண்டும் முயன்றான். ஆனால் மூங்கில் கூடையில் தண்ணீர் எப்படி நிற்கும்? மீண்டும் சிந்திப் போனது. "தாத்தாவிற்காக இன்னும் ஒரே ஒருமுறை தண்ணீர் கொண்டு வா" என்று பெரியவர் கேட்டுக் கொண்டார்.

இம்முறை மட்டும் எப்படியாவது தண்ணீர் எடுத்து வந்து கொடுத்து விட்டு திரும்பிப் பார்க்காமல் சென்று விட வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான் இளைஞன். இவர் எந்த புத்தகத்தைப் படித்தால் எனக்கு என்ன வந்தது? என்று நினைத்துக் கொண்டு மீண்டும் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தான். வழக்கம் போல் எல்லா தண்ணீரும் தரையில் சிந்தி விட்டது. "பெரியவரே, இந்தாங்க, உங்க கூடை, இதில் தண்ணீர் நிற்காது என்பது உங்களுக்கு தெரியுமா? தெரியாதா? எதற்கு இவ்வளவு பாடு படுத்தினீர்கள்?" என்று கேட்டான்.

அதற்குப் பெரியவர் தம்பி சுப்பிரமணி, இதில் தண்ணீர் நிற்காது என்பது எனக்கு தெரியும். இருந்தாலும் நீ முதலில் தண்ணீர் பிடிக்க சென்ற பொழுது இதன் உட்புறம் எப்படி யிருந்தது? என்று கேட்டார். ரொம்ப அழுக்கு பிடிச்சு கருப்பாக இருந்தது என்று பதிலளித்தான். இப்பொழுது எப்படியிருக்கிறது? என்று கேட்டார். தண்ணீர் பட்டு பட்டு கூடையின் உட்புறம் சுத்தமாகி இருந்தது. தம்பி நீ கேட்ட கேள்விக்கு பதில் இது தான். எத்தனை முறை தண்ணீர் பிடித்தாலும் மூங்கில் கூடை நிறையவே இல்லை. ஆனாலும் ஒவ்வொரு

முறையும் கூடை சுத்தமாகிக் கொண்டே இருந்தது. அதுபோலத் தான் எத்தனை முறை படித்தாலும் கீதை மனப்பாடம் ஆகிவிடும் என்று கூற முடியாது. ஆனால் படிக்கிற ஒவ்வொரு முறையும் உள்ளுக்குள் இருக்கும் அசுத்தம், கறைகள் சுத்தமாகிக் கொண்டே இருக்கும் என்று கூறினார். இளைஞனுக்கு என்னென்னவோ செய்தது.

பெரியவரே, எனக்குள்ளேயும் நிறைய அழுக்குகள் இருக்கிறது. எனக்கும் இந்த புத்தகம் கிடைக்குமா? என்று கேட்டான் சுப்பிரமணி. நிச்சயமாக என்று கூறிய பெரியவர் வீட்டிற்குள் இருக்கும் ஒரு பகவத்கீதை புத்தகம் எடுத்து வந்து கொடுத்தார்.

பாபா கூறுகின்றார் - இனிய குழந்தை களே! நான் கூறும் ஞான மகாவாக்கியங்களை தினமும் கேளுங்கள், கேட்க கேட்க உள்ளுக்குள் இருக்கும் அசுத்தங்கள் நீங்கி சுத்தமானவர்களாக ஆகிவிடுவீர்கள். அதனால் தான் என்னை பதீத பாவன் என்றும், பாபகடேஷ்வரர் என்றும் கூறி அழைக்கிறீர்கள்.

## சீருடைகள் பலவிதம்

ஆடைகளில் அநேக விதமுண்டு. இவற்றில் சீருடைகள் தனி ரகம். வெவ்வேறு துறைகளில் பணியாற்றுகிறவர்கள், வெவ்வேறு வித ஆடைகள் அணியும் பழக்கமுடையவர்களாக இருப்பதைப் பார்க்கின்றோம். ஒருவர் அணிந்திருக்கும் சீருடையை வைத்தே, இவர் காவல்துறையைச் சார்ந்தவர், இவர் மருத்துவத்துறையைச் சார்ந்தவர், இவர் நீதித்துறையைச் சார்ந்தவர். இவர் பாதுகாப்புத் துறை யைச் சார்ந்தவர் என்று எளிதாகப் புரிந்து அடையாளம் காட்டுவதாக சீருடைகள் அமைந்திருக் கின்றன. சீருடைகள், மற்ற ஆடைகளைப் போலன்றி, இதனை அணிபவர் அனுசரிக்க வேண்டிய விதி முறைகள் மற்றும் கடமைகளை ஸ்தூலமாக பறைசாற்றுவதாக இருக்கின்றன. ஆயினும் இச்சீருடைகள் இதனை அணிந்திருப்பவர் ஆற்றும் கடமைகளுக்கு உத்தரவாதமுடையவைகளல்ல. இன்னொரு பக்கம், குடும்பத்திலும் பெற்றோர்கள் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் தத்தம் கடமைகளை உரிமையோடும் செல்வாக்கின் அடிப்படையிலும் அதிகாரத்தோடு செய்வதையும் பார்க்கின்றோம். எனினும் இதை உணர்த்தும் ஸ்தூல அடையாளங்கள் இவர்களிடமில்லை. இது எதைக் குறிக்கின்ற தெனில் உண்மை, எப்போதும் தனித்து நிற்கும் வல்லமையுடையது. இதற்கு ஸ்தூலமான துணை அவசியமில்லை என்பது தான்.

இதேபோன்று இந்த சரீரம் நமக்கு ஒரு ஆடை தான். இந்த ஆடை அணிந்து கொண்டு பல்வேறு காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறோம். என்றாலும் இச்சரீரமானது இவன் ஒரு மனிதன் என்றும் ஆண் அல்லது பெண் என்ற அடையாளத்தைக் காட்டுமே தவிர அவரவரது குணங்களை அடையாளம் காட்டுவதில்லை.

ஆதலால் நமக்குத் தேவை, ஒருவர் தமது கடமைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்ற ஞானம் தான். காரியங்கள் பலவாகவும், அதைச் செய்பவர்கள் பலராகவும் இருக்கின்றனர். இதைப் புரிந்து கொண்டால் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தவும், சகோதர மனப்பான்மையோடு ஒற்றுமையை வளர்த்துக் கொள்வது எளிது.

**பொறுமையுள்ள இடத்தில் அமைதி இருக்கும், அன்பும் இருக்கும்**
**இது ஒவ்வொன்றையும் சாத்தியமாக்குகிறது**

# விளையாட்டுத் துறையில் வெற்றி பெற மன சக்தி அவசியம்

பி.கு. ரவி, (ஈரோடு)



**வாழ்க்கை என்பது விளையாட்டு ! சிரித்து சிரித்து வாழ்வோம்!!**

**விளையாட்டில் பூரணத்துவத்தினை மீண்டும் அடைவோம்**

வாழ்க்கை என்பது விளையாட்டு, அதில் வெற்றியோ தோல்வியோ வருவது சகஜம். வெற்றியிலும், தோல்வியிலும் சமமாக இருந்து சிரித்து வாழ வேண்டும். விளையாட்டாக எடுத்துக் கொண்டால் எதுவுமே கடினமில்லை.

நமது பாரத தேசம் சத்யுகத்தில் அதாவது 5000 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த வாழ்க்கை அனைத்தும் விளையாட்டாகவே இருந்தது. கல்வியும் விளையாட்டு மூலமாகவே கற்றுக் கொடுக்கப்பட்டது. பல கலைகளும் விளையாட்டாக மகிழ்ச்சியாக கற்றுக் கொடுக்கப்பட்டது. வாழும் முறை, ஆட்சி முறை, கலை, அறிவியில், இசை, விவசாயம், கட்டிடக்கலை, நெசவு, நாடகம் அனைத்தும் விளையாட்டாகவே கற்றுக் கொடுக்கப்பட்டது. மக்கள் ஆனந்தமாக ஆரோக்கியமாக நீண்ட ஆயுளோடு வாழ்ந்தனர்.

துவாபர யுகத்திலும் மக்கள் விளையாட்டாகவே வாழ்க்கை வாழ்ந்தனர். பல வீர விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்தனர். அரசர்களும், இளவரசர்களும், அரச குடும்பத்தினரை சேர்ந்தவர்களும் விளையாட்டில் தேர்ச்சி பெற்றிருந்தனர். வீர விளையாட்டில் தலை சிறந்தவர்களுக்கே தனது பெண்ணை மணமுடித்து வைக்க பெற்றோர் விரும்பினர். காளைகளை அடக்குபவர்களுக்கு தான் பெண் கொடுத்தனர். இளைஞர்கள் நேரத்தை வீணாக கழிப்பதைக் காட்டிலும் கால் பந்ததாட்டம் விளை யாடலாம் என்று வீரத்துறவி விவேகானந்தர் குறிப்பிட்டார்.

காலம் மாறியது, விளையாட்டு போட்டி பொறாமை, பகைமை, போர் என்று சீரழிந்தது. திறமை மறைந்தது. விளையாட்டு துறையில் ஊழல், முறையற்ற தேர்வு, ஊக்க மருந்து உட்கொள்ளல், சூதாட்டம் முதலியன இடம் பெற்று விளையாட்டின் புனிதத்துவம் கெட்டு விட்டது. திறமையான விளையாட்டு வீரருக்கு வாய்பளிக்கப்படவில்லை, ஊக்கம் உற்சாகம் குறைக்கப்பட்டது.

## விளையாட்டில் நற்பண்புகள்:

விளையாட்டு மூலமாக ஆரோக்கியம், ஒற்றுமை, நாடுகளிடையே நல்லிணக்கம், நாட்டுப்பற்று, உற்சாகம், போன்ற நற்பண்புகள் வளரும். ஆரோக்கியமான உறவு முறை வளரும் சட்டத்திட்டங்களை மதிக்கும் பண்பு அதிகரிக்கும். மரியாதையும் அன்பும் எதையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பண்பு அதிகரிக்கும். விளையாட்டில் சகிப்புத்தன்மை, எதையும் ஏற்றுக் கொள்ளும் பண்பு, எதிர்நோக்கும் சக்தி, வளைந்து கொடுக்கும் தன்மை மிக அவசியம். தோல்வியையும் கூட சகஜமாக ஏற்றுக் கொள்வது அவசியம்.

**விளையாட்டில் போதை மருந்து மாத்திரைகளை உபயோகிப்பது, ஊக்க மருந்து உட்கொள்ளுதல், சூதாட்டம்**

சில விளையாட்டு வீரர்கள் ஊக்க மருந்து உட்கொண்டு தங்களது திறமைகளை வெளிக் கொணர பிரயத்தனப்படுகின்றனர். சிலர் போதை மருந்துகளுக்கு அடிமையாகி ஆரோக்கியத் தினை இழக்கின்றனர். உதாரணமாக அர்ஜன்டீனா கால்பந்து அணிக்கு தங்கக் கோப்பை வாங்கி கொடுத்த மொரடோனா என்ற கால்பந்தாட்ட வீரர் போதை பொருளுக்கு

அடிமையாகி விளையாட்டிலிருந்து நீக்கப்பட்டார். சிலர் பணத்தின் மீது ஆசையினால் பணம் பெற்றுக் கொண்டு தனது திறமைகளை குறைத்து காட்டுகின்றனர். குழுவிற்கு தோல்வியை ஏற்படுத்துகின்றனர். இது மிகவும் கண்டிக்கத் தக்கது. விளையாட்டு புனிதத்துவத்தினை சீரழிக்கக்கூடியது. நல்ல மன ஆரோக்கியம், மன உறுதியில்லாதவர்களே இது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். நற்பண்புகளின் குறைவு காரணமாகவே இது போன்ற இழி செயல்கள் நடைபெறுகிறது.

### விளையாட்டும் மன சக்தியும்:

விளையாட்டில் தலை சிறந்து விளங்க உடற்பயிற்சி கூடவே மன பயிற்சியும் அவசியம். விளையாட்டின் நுணுக்கங்களை மனதளவில் பயிற்சி பெற்றவர் வெற்றிகளை குவிப்பார். மனதளவில் வென்றவரே வென்றவர் மனதளவில் தோற்றவர் தோற்றவரே யாவார். மனம் தளர்ந்து விட்டால் வெற்றி நழுவி விடும். மனதளவில் பயிற்சி பெற்ற வீரர்கள் வெற்றிகளை குவித்ததையும், வெறும் உடற்பயிற்சி மட்டும் செய்து விட்டு மனப் பயிற்சி செய்யாமல் இருந்தவர்கள் படுதோல்வி அடைந்ததையும் ஆராய்ச்சி குறிப்பு கூறுகிறது. ஒருமுறை கொரியா நாட்டில் நமது பாரத விளையாட்டு வீரர்கள் படுதோல்வி அடைந்தனர். கொரியாவின் வெற்றிக்கு என்ன காரணம்? எப்படி அவர்களால் வெற்றி பெற முடிந்தது என பாரதத்தின் பயிற்சியாளர் வினவியபோது உங்கள் பாரத தேசத்தில் சொல்லித்தரும் யோக பயிற்சி, மனப்பயிற்சிகளை கற்றுக் கொண்டு தான் நாங்கள் வெற்றி பெறுகிறோம் என கூறினர். 60 முதல் 70 சதவீதம் மன சக்தியே வெற்றி பெற வழி வகுக்கிறது.

உடல் ஊனமுற்றவர்களும் கூட மனம் ஊனம் இல்லாமல் இருந்ததினால் சாதனைகள் செய்வதை நாம் காண்கின்றோம். செயற்கை கால்களை பொறுத்தி எவரெஸ்ட் சிகரம் ஏறியதை பார்க்கின்றோம். இரு கைகள் இல்லாமல் நீச்சல் அடிப்பதை பார்க்கின்றோம். ஒரு கையால் கிரிக்கெட் விளையாடியதை பார்த்திருக்கிறோம். கால்களினால் ஓவியம் வரைவதையும், கால்களினால் விமானம் ஓட்டுவதையும் பார்த்தோம். இவை அனைத்துமே எவ்வாறு சாத்தியம். மனதினை ஒருமுகப்படுத்தினால் எல்லாமே சாத்தியம் தான்.

1954ஆம் ஆண்டு வரை 4 நிமிடங்களுக்கு குறைவான நேரத்தில் ஒரு மைல் தூரம் ஓட முடியாது என நினைத்தனர். மனிதனின் உடல் அமைப்பின் படி 4 நிமிடத்திற்கு குறைவாக ஓட முடியாது என மருத்துவ அறிஞர்கள் தீர்மானித்தனர். ஆனால் ரோகர் பேனிஸ்டர் என்பவர் ஓடி காட்டினார்.

1970 வரை 501 பவுண்ட் எடையை தூக்க முடியாது என நினைத்திருந்தனர். மனிதனின் உடற்கூறுபடி 500 பவுண்டிற்கு மேல் ஒருவனின் தலைமீது எடை தூக்க முடியாது என விவாதித்தினர். ஆனால் வ்சலி அலெளக்சீவ் என்ற ரஷ்ய வீரர் 501 பவுண்ட் எடையை தூக்கி சாதனை செய்தார். இதுவெல்லாம் பெற சாத்தியம் மன சக்தி தான் காரணம்.

### விளையாட்டும் தியானமும்:

விளையாட்டுத் துறையில் பல சாதனைகளை குவிக்க மனம் ஒருமுகப்படுதல் அவசியம். அர்ஜுனரும், துரோணாச்சாரியாரும் மனதை ஒருமுகப்படுத்தியதினாலே வெற்றிகளை குவித்தனர். அதனால் தான் அர்ஜுன் அவார்ட், துரோணசார்யா அவார்ட் என்பது போன்ற பெரிய பதக்கம் தருகின்றனர். எந்த ஒரு விளையாட்டு வீரருக்கு மனம் ஒரு முகப்படுகிறதோ அந்த வீரர் வெற்றி பெறுவது திண்ணம். மற்றவர்களை விட நேர்த்தியாக, துல்லியமாக விளையாடுவர். மனதினை ஒருமுகப்படுத்தும் வீரரை வீழ்த்தவே முடியாது.

நாம் நேர்த்தியாக விளையாடி, வெற்றி

பதக்கத்தினை பெறுவதுபோல காட்சிகளை மனதில் அடிக்கடி படமாக பார்க்கும் பயிற்சியினால் மனதில் நம்பிக்கை உதயமாகும். வெற்றி நிச்சயமாக கிடைக்கும்.

அர்னால்ட் சுவார்ஜெனிகர் (Arnold Schwarzenegger) என்பவர் உலகின் மிக சிறந்த உடலமைப்பை பெற்றவர். மனதில் வெற்றியை படமாக பார்க்கும் பழக்கத்தினாலேயே சாதனை களை அடைந்தேன் என்று கூறுகிறார்.

நெப்போலியன் மணலில் போர்களம் போல அமைத்து வெற்றி பெறுவது போல கனவு காணும் பழக்கம் கொண்டவர்.

மைக்கேல் ஜோர்டன் ஒவ்வொரு முறை யும் தான் தான் வெற்றி பெறுவதுபோல கற்பனை செய்வாராம். ஆல்பர்ட் எய்ன்ஸ்டன் ஒரு நொடிக்கு 1,86,000 மைல் செல்லும் ஒளியுடன் தானும் செல்வது போல கற்பனை செய்வாராம்.

மனம் ஒருமுகப்படுத்துதல் பயிற்சி தான் தியானமாகும். இராஜயோக தியான ம் ஒரு நல்ல மனப் பயிற்சியாகும். இந்த தியானத்தினை இடைவிடாமல் முறையாக பயிற்சி செய்து வந்தால் நமது மனதில் அபரிமிதமாக சக்தி வளரும், தியானத்தினால் ஆழ்மனம் விழிப்படைவதினால் நம்மால் பல சாதனைகளை குவிக்க முடியும்.

எனவே, பாரத தேசத்தின் பழம் பெருமை வாய்ந்த இராஜயோக தியானத்தினை பயின்று விளையாட்டு துறையில் பல வெற்றிகளை குவிப்போமாக!!! விளையாட்டு துறையில் பூரணத்துவத்தினை அடைவோமாக!!

## பாராட்டுதல் (Appreciation)

எப்போதும் தான் பெற்ற அல்லது தனக்குக் கிடைத்திருக்கின்ற அதிர்ஷ்டத்தை நினைத்து கர்வப்படாமல், உணர்ந்து மதிக்க வேண்டும். பாராட்டவும் வேண்டும். அப்போது தான் அதை மற்றவருக்காகவும் நல்லமுறையில் பயன்படுத்தவும் முடியும்.

எவ்வளவுக்கெவ்வளவு நமக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பாராட்டுகிறோமோ, அவ்வளவு மற்றவர்களுக்காகவும் பகிர்ந்து கொள்வோம். உதாரணமாக நம்மிடம் நிறைய செல்வம் இருக்கிறது. அதை மற்றவர்களிடமும் பகிர்ந்து கொள்ளும்போது, ஒரு நாள் அது நம்மிடமே திரும்பி வந்து சேர்வதை உணர்கிறோம்.

மேலும் மனதிற்கு மகிழ்ச்சியும், திருப்தியும் அளிக்கும் விஷயம் ஒன்று உண்டு. அது என்ன? நாம் தெய்வீக குணங்கள் மற்றும் சிறப்புகளால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். ஆதலால் நாம் எந்தெந்த விதத்திலெல்லாம் அதிர்ஷ்டசாலியாயிருக்கிறேன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை உணர்ந்து மதிக்கவும் வேண்டும். இவ்வாறு மதிப்பை உணரும்போது, இன்னும் கொஞ்சம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று பிறரிடமிருந்து எதிர்பார்க்க மாட்டோம். அப்போது தன்னிடமுள்ளதை இன்னும் நல்ல முறையில் பயன்படுத்துவேன். மேலும் இதனை தனது நன்மைக்காவும், பிறர் நன்மையின் பொருட்டும் எப்படியெல்லாம் பயன்படுத்தினால் நன்றாயிருக்கும் என்பதைப் பற்றி நிச்சயம் சிந்திப்பேன்.

# அகம்பாவத்தை கட்டுக்குள் வைத்தல்

பிகு. பிரியா, லாஸ் ஏஞ்சல்

அகம்பாவம் நம் மனதிலும் புத்தியிலும் அடிக்கடி வருகை தரும் ஒரு அழையா விருந்தாளி. சில வேளைகளில் நமக்கு வேண்டியவர் யாராவது சுட்டிக்காட்டும் வரை அந்த கர்வமுள்ள நபர் (எண்ணம்) நம்மிடம் வந்திருப்பதை அறிந்து கொள்வதேயில்லை.

### அகம்பாவம் என்பது என்ன?

அகம்பாவம் என்பது தன்னைப்பற்றியே தவறான ஒரு அர்த்தத்தைக் கற்பித்துக் கொள்வது. அகம்பாவம் தற்பெருமையின் ஒரு அங்கம், ஆனால் தலைகீழான எண்ணம், தன்னை எதிர்மறையான அர்த்தத்தில் புரிந்து கொண்டிருப்பது. அகம்பாவம் தலை தூக்கும் போது தனக்குத் தோன்றும் யோசனை, கருத்து செயல் ஆகியவை சரியானது என்று நம்ப வைக்கும். தன்னை அவ்வாறு எண்ண வைப்பது ஒரு பொய்யான மாயை. உதாரணமாக என் சக ஊழியர் என்மீது பொறாமை கொண்டுள்ளார், இது நிச்சயம் - இப்படி உண்மையோ இல்லையோ தானே யூகிப்பது. மற்றொரு உதாரணம்: எல்லோரும் நான் மிக நன்றாகப் பாடுவதாகச் சொல்கின்றனர், நாட்டிலேயே நான் தான் சிறந்த பாடகனாக இருப்பேன் போலிருக்கிறது. என்னைப்போல வேறு ஒருவராலும் பாட முடியாது இப்படி ஒரு தற்புகழ்ச்சி.

### அகம்பாவம் தன்னிடத்தில் உள்ளது என்பதை எப்படி உணர்வது?

முக்கியமான அறிகுறி (1) மனதால் புண்படுவது (2) அவமதிப்பு அல்லது நிந்தனை. தான் கொண்டுள்ள நம்பிக்கை, தனக்குத்தானே உருவாக்கிக் கொண்ட மாயத்தோற்றம், கிண்டல் கேலியால் அல்லது அவமரியாதை ஆகும்போது மனம் புண்படுவது அல்லது கோபம் கொள்வது. இதெல்லாம் அகம்பாவம் இருப்பதை உணர்த்தக் கூடியவை. நாம் ஏற்றுக் கொள்ளவில்லை யெனினும் கூட உள்ளுக்குள் ஒரு மூலையில் சூட்சுமமாக தன் வேலையைச் செய்கிறது. பலனாக மனநிலை கெடுகிறது, வெறுப்பு வருகிறது.

**அகம்பாவத்தின் இரண்டு நிலைகள்:** ஒன்று கோபம், மற்றொன்று துக்கம் (வருத்தம்) கோபம் ஏற்படுகிறது என்றால் எல்லோரையும் விட தானே மேலானவர் (உயர்வு) என்ற எண்ணத்தில் பாதிப்பு. வருத்தம் அல்லது துக்கம் ஏற்படுகிறது என்றால் தாழ்வு மனப்பான்மை. அனுபவிக்கும் அனைத்து துன்பங்களும் என்னைப் பற்றி நானே தவறாகப் புரிந்து கொண்டிருப்பது, அதேபோல மற்றவர்களையும் வாழ்க்கை மீதும் கொண்டுள்ள தவறான புரிதல். என்னுடைய அகம்பாவம் உண்மையைத் தவிர்த்து வேறு விதமாகப் பார்க்க வைக்கிறது, பார்வை மங்கலாக ஆகிவிடுகிறது. நான் எண்ணுவது, பார்ப்பது, முடிவு செய்வது, நடந்து கொள்வது இவை மட்டுமே சரியானது, பிறரது அனைத்தும் முற்றிலும் தவறு.

மேற்கூறியபடி நானே முடிவு செய்து கொண்ட உணர்வு என்னை மேலும் துக்கத்தில் ஆழ்த்துகிறது. காரணம் மற்றவர்கள் தவறானவர் களாக இருந்தபோதும் கூட என்னுடைய கூற்றை ஏற்றுக் கொள்ளாதிருப்பது விந்தையாக உள்ளது. மேலும் மேலும் என் கருத்தை நிரூபிக்க போராடினாலும் விளைவு சாதகமில்லாமையால் ஏமாற்றமே மிகுந்திருக்கிறது. இறுதியாக அவர்களைத்தான் மோசமானவர்கள் என முடிவு கட்டி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவர்களை துக்கமடையச் செய்கிறேன் அல்லது மகிழ்ச்சிக்கு ஊறு விளைவிக்கிறேன். அவர்களோ இதையெல்லாம் பொருட்படுத்தாத அளவு சக்தி உள்ளவர்களாக இருந்தால் என

க்குள் நானே அழுகிறேன், வசை பாடிக் கொள்கிறேன்.

ஒரு கனம் நிதானித்து எண்ணிப் பார்க்கும் போது என்னுடைய அகங்காரம் என்னையே ஆட்டிப்படைக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். எதன் ஆதாரத்தில் அல்லது அடிப் படையில் மற்றவர்களைப்பற்றி தீர்மானிக்கிறேன் என்பது புரியவில்லை. நான் நடந்து கொள்ளும் விதம், என்னிடமுள்ள இறுமாப்பு மற்றவர்களுக்கு தெரியுமளவிற்கு எனக்கு தெரிவதில்லை, ஆயினும் என்னை அறியாமலே அவ்விதமாக செயல்படுகிறேன்.

அகங்காரத்தை அறிந்து கொள்ள உண்மையை தெளிவாகப் புரிந்து கொள்வது மிகமிக அவசியம். மற்றவர்கள் என்னிடம் நடந்து கொள்வது போல் நான் இல்லை, மற்ற வர்கள் என்னைப்பற்றி நினைப்பது போல் என் வாழ்க்கை முறை ஆகாது. இதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். என்னுடைய கற்பனையான எண்ணங்கள், பழமையான மூட நம்பிக்கை போன்றவையே சிறு வயது முதலே நம்முள் ஊறிப்போனதன் காரணம் கர்வம் முளை விட்டு வித்தாகிறது.

சத்தியம் (உண்மை) நிலை மற்றவருடைய தவறை மன்னிப்பதாகும். அவர்கள் மீது இரக்கம் கொள்வதாகும். ஆனால் அகந்தையோ அவ்வளவு எளிதாக மன்னிக்க விடாது. அவர்கள் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும் என்று எண்ணத் தோன்றும். உண்மை நிலை மற்றவர் மீது அனுதாபம் கொள்ள செய்கிறது.

அகங்காரம் தன் செயலை நியாயப்படுத்தும். தீர்ப்பு அல்லது கருத்து சொல்வது ஒரு தலைபட்சமாக, பாரபட்சமாக இருக்கும், தன்னுடைய தீர்ப்பு தவறாகி விட்டது என்று ஒப்பு கொள்ள அனுமதிக்காது. தெரிந்து பொய் சொன்னாலும் அதை மறைக்க பல பொய்களை அடுக்கடுக்காக கூற வைத்து தன்னுடையதை சரியென நிலை நாட்ட ஊக்குவிக்கும்.

***அகங்கரத்திலிருந்து விடுபட தியானம்:***

சுயமரியாதை, நேர்மை மற்றும் பணிவு அகங்காரத்திற்கு நேர் எதிர்பதங்கள். நேர்மையானவர் எனில் தவறு செய்திருந்தால் ஏற்றுக் கொள்ளும் பண்பாடு இருக்கும், தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உந்துதல் (எண்ணம்) மனதில் வரும்.

தன்னை உணர்ந்து மனதை ஒரு நிலைப்படுத்தி உள்நோக்கு முகமுடையவராகி (ஆத்ம சோதனை) நேர்மறை எண்ணம், நடத்தை, பரந்த மனம் ஏற்றுக் கொள்ளும் திறந்த மனம், உள்ளுணர்வு, எல்லாவற்றையும் விட மேலான உயர்வான சிவபாபாவின் ஸ்ரீமத்படி சிறிதும் வழுவாமல் நடந்து கொள்வோமானால் நாம் மாறுவதுடன் உலக மாற்றத்திற்கும் நாமும் ஒரு கருவியாக இருக்க முடியும். இதற்கு தியானம் எளிய சாதனம்.

தியானம் என்னை நானே அறிந்து கொள்ள உதவுகிறது. தியானத்தில் சில மணித்துளிகள் அமரும்போது என் செயல்பாடுகள், சம்மந்தப் பட்ட எண்ணங்கள், உணர்வுகள், அறிந்து கொள்ளும் சக்தி, என்னுள் புதைந்துள்ள தவறான நம்பிக்கைகள், இறுதியாக அகங்காரம் என்ற திரைக்குப் பின்னால் உள்ள அத்தனை யும் புலப்படுகிறது.

**உண்மையாக இருப்பதற்கு தைரியம் அவசியம்.**
**இதற்காக ஆழமாக சிந்தித்து மயங்கிய நிலையிலிருக்கும்**
**மனோ திடத்தை தட்டி எழுப்புங்கள்**

# கேள்வி பதில்

**கேள்வி: பிரம்மா குமாரிகள் வித்யாலயத்தின் ஆன்மீக விளக்கங்கள் கேட்பதற்குப் புதுமையாக இருக்கின்றன. சாஸ்திரத்தில் எல்லாமே இருக்கும் போது இதற்கு இப்பொழுது என்ன அவசியம்?**

**பதில்:** காலம் மாறிக் கொண்டேயிருக்கின்றது. கால மாறுதலுக்கேற்றவாறு மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டேதானிருக்கும். மாறத்தான் வேண்டும் என்பது இயற்கை விதி. இதைத்தடுத்து நிறுத்த இயலாது. பழிக்குப்பழி என்னும் கோரப்பிடியில் சிக்கி மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் தான் ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்றார் ஏசுநாதர், எதற்காக? அது காலத்தின் கட்டாயம். அது போலவே சாஸ்திரங்கள் இருப்பதும், மக்கள் அதைப்படிப்பதும் உண்மையே. ஆனால் மூன்றாம் கண் (ஞானக்கண்) மூடிக் கிடக்கிறதே! இவ்வுலக அரங்கத்தில் கடைசிக் காட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதோ விரைவிலேயே வேடம் கலைந்து வீடு திரும்ப வேண்டும் என்பதோ மீண்டும் நாடகத்தில் முதல் காட்சிக்குத் தயாராக வேண்டும் என்பதோ தெரியவில்லையே. ஆகவே தான் புதிய உலகிற்கான புதுமை ஞானமும் மனிதனுக்கு அவசியமாகிறது.

**கேள்வி: இவ்வுலக நாடகம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்றும் மீண்டும் அவ்வாறே நடக்கும் என்றும் பிரம்மா குமாரிகள் கூறுகின்றார்கள். இது ஒரு கற்பனை என்றே நான் கருதுகின்றேன்?**

**பதில்:** நீங்கள் நினைப்பது போல் இந்த நம்பிக்கை கற்பனை அல்ல. புதுமையான தோ, புதிய கண்டுபிடிப்போ அல்ல. நாடகம் சாசுவதமானது. ஆகவே நிச்சயிக்கப்பட்ட ஒன்று என்பதே உண்மை. அவ்வாறானால் முன்பு என்ன இருந்ததோ, அது பின்னரும் இருக்கும் என்ன நடந்ததோ அது தான் மீண்டும் நடக்கும். இதில் புதுமை ஒன்றுமில்லை. இறைவன் படைப்பில் ஏற்றத் தாழ்வு ஏன்? மனிதன் பாவியாவதும், பழிக்கு ஆளாவதும் ஏன்? என்ற கேள்வி எழும். ஆனால் மனிதனை மீட்க வேண்டு மென்று அவன் முன்னே அதற்கான திட்டத்தை இறைவன் வைக்கும்போது அதை ஏற்கவும் மறுக்கவும் மனிதன் சுதந்திர முள்ளவனாக இருந்தான். இதைப் புரிந்து கொள்வது அவசியம்.

**கேள்வி: பிரம்மா குமாரிகள் பிரம்மச்சரிய கோட்பாட்டை முக்கியமாக வலியுறுத்திக் கூறுகின்றனர். இதை எல்லோருமே ஏற்றுக் கொண்டு நடந்தால் உலகத்தின் கதி என்ன வாகும்?**

**பதில்:** உலகத்தின் கதியை நிர்ணயிக்கும் சக்தி நம்மிடம் உள்ளதா? இதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இதைப்பற்றி மகாத்மா காந்தியடிகள் தமது கருத்தை இவ்வாறு கூறியிருக்கின்றார். பிரம்மச்சர்யம் கடைப்பிடிப் பதன் மூலம் உலகம் முடிந்து விடும் என்றால் இதற்கு நாம் எப்படி பொறுப்பேற்க முடியும். உலகத்தின் எதிர் காலத்தைப் பற்றி அக்கறை கொள்ள நாம் கடவுளா என்ன? நாம் ஏதாவது வியாபாரமோ அல்லது தொழிலோ செய்வதா யிருந்தால் அப்போது உலகம் என்ன வாகும் என்றெல்லாம் சிந்தித்தா செய்கிறோம்? யார் யாரெல்லாம் பிரம்மச்சர்யம் கடைப்பிடிக்கிறார்கள்? யார் யாரெல்லாம் கடைப்பிடிக்க வில்லை என்பதெல்லாம் நமது வேலை இல்லை. உண்மையான பிரம்மச்சாரியாயிருந்தால் நாளடைவில் அவரே புரிந்து கொள்வார். உண்மையில் பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிப் பதன் மூலம் விரும்பத்தக்க ஒழுங்கு முறை களும் மறுமலர்ச்சியும் உலகில் ஏற்படும். வருங் காலத்தைப் பற்றி இதில் பயப்படுவதற்கொன்று மில்லை என்றார். அப்படியானால் இதைப்பற்றிப்

பிரச்சாரம் செய்வீர்களா என் கேட்டதற்கு ஆம் நீங்கள் பயப்படுவதைப்போல படைப்பு அழிந்து போய்விடாது.. மாறாக மிக உயர் ஒழுக்க முள்ளதாக மாற்றம் பெறும் என்று பதிலளித்தார்.

**கேள்வி புது உலகில் ஜனத்தொகை மிக மிகக் குறைவானதாகவே இருக்குமென்று கூறப்படு கின்றது. அப்படியானால் யார் எங்கு எப்பொழுது வரவேண்டுமென்று தீர்மானிப்பது யார்?**

**பதில்:** இதற்கு முதலில் புது உலக பூகோளத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். ஆரம்பத்தில் மனிதன் வாழப் போதுமான மண் பரப்பளவு மிக குறைவான தாகவே இருக்கும். புது உலகம் இன்றைய உலகிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தூய்மையான உலகாகும். தகுதியுள்ள ஆத்மாக்களே அங்கு ஜென்மம் எடுக்கின்றனர். மற்ற ஆத்மாக்கள் சாந்தி நிலையில் சாந்தி தாமமாகிய பிரம்ம லோகத்தில் பிறவிக்கப்பாற்பட்ட நிலையில் இருப்பர். ஆரம்பத்தில் வருபவர்கள் மிகவும் தூய்மை நிறைந்தவர்கள். இதற்காக இதற்கு முந்தைய பிறவிகளில் குறிப்பாகக் கடைசிப் பிறவியிலும் இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையில் ஆதாரமாயிருக்கும். பரிசுத்த தன்மை முயற்சியின் அடிப்படையில் ஆன்மாவுக்கு ஆன்மா வேறுபடுவதால் புது உலக அரம்ப நாடகப் பாத்திரத்தை ஏற்கும் திறன் எல்லோருக்கும் இருப்பதில்லை. ஒவ்வொரு ஆத்மாவும் அதன் சக்திக்கு ஏற்ற வாறு கர்மங்களைச் செய்யும் போது தான் சிரமப்படாமல் சௌகரியமாக இருப்பதாக அனுபவம் செய்கிறது. இது ஒவ்வொரு ஆத்மாவும் அதனதன் பாத்திரத்திலேயே இயல்புடையதாக இருக்கிறது என்பதை உறுதி செய்கிறது. எனினும் படைப்பின் கதையே ஒரு உண்மை நாடகத்தின் கதையாகும். எந்த நாடகமானாலும் நடிகர்கள் அவரவருக்கு நிச்சயிக்கப்பட்ட காட்சியில் தான் அரங்கத்தில் தோன்றுவார்கள். இது ஒரு எல்லையற்ற நாடகம்.

**கேள்வி: கிறித்தவர்கள், ஏசுவே உண்மையும், வழியுமாயிருக்கின்றார் என்றும் அவர் மூலமாகவே இறைவனை அடைய முடியுமென்றும் கூறுகின்றனர். இதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?**

**பதில்:** கிறித்தவர்கள் தான் அவ்வாறு கூறுகின்றார்கள். இது அவர்களது நம்பிக்கை. உலகிலுள்ள எல்லோருமே அப்படிக்கூறவில்லை. இதை ஏற்பதும் மறுப்பதும் அவரவர் விருப்பம். உதாரணமாக பௌத்தர்கள், சீக்கியர்கள், இந்துக்கள் வெவ்வேறு நம்பிக்கையுடையவர் களாயிருப்பது கண்கூடு. ஒவ்வொரு மதத்தின ருக் கும் பிரத்தியேகமான சாஸ்திர முண்டு. அதைத்தான் பின்பற்றி வருகிறார்கள். இந்துக்கள் ஸ்ரீ கிருஷ்ணரை கடவுள் அவதாரமென்பர். முஸ்லீம்கள் முகமது நபியை பின்பற்றுவார்கள். கிறித்துவர்கள் அவரைப் பின்பற்றுவார்களா? அவர் கூறியவற்றை ஏற்பார்களா? இல்லை. எனினும் எல்லோரும் அழைக்கின்ற இறைவன், எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தையாக இருக்கின்ற இறைவன் ஒரே ஒருவர் தான். மத ஸ்தாபகர்கள் அனைவருக்கும் தந்தை அவர்தான். படைப்பவர் ஒருவரே. அந்த ஒருவர் யார் என்பதை காலத்தால் உணர்வர்.

**நீங்கள் எதிர் கொள்ளக்காத்திருக்கும் சவால் இது தான். அதாவது மடுவை மலையாக்காதீர்கள், மலையை மடுவாக்குங்கள்.**

**அமைதியாக அமர்ந்திடுங்கள், அமைதியாக மூச்சுவிடுங்கள், அமைதி அனுபவத்தில் இருங்கள், இதன் மூலம் நீங்கள் அனுபவம் செய்யும் அமைதியின் அதிர்வலைகள் அகிலமெல்லாம் பரவும்**

# வாழ்க்கை வாழத்தான்! வீணடிப்பதற்கல்ல!



பி.கு. சென்பகராஜ், மதுரை

இன்றைய காலக்கட்டத்தில் கடன் தொல்லை, குடும்ப வறுமை, தொழில் நஷ்டம், தோல்வி, தேர்வில் தோல்வி போன்றவற்றால் தற்கொலை செய்துகொள்வது பத்திரிக்கைகளில் தினமும் வரும் செய்தியாகி விட்டது.

விவசாயிகள் முதல் தொழிலதிபர்கள் வரை இந்தியாவில் பெரும்பாலான தற்கொலை களுக்கு முக்கியக் காரணம், கடன் தொல்லை தான் எனக் கூறப்படுகிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், குடும்பப் பிரச்சனை, காதல் தோல்வி, வாழ்க்கையில் விரக்தி இப்படி பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும், இவை கள் ஒரு காரணமாக இருக்குமே தவிர, இவை மட்டுமே காரணமாக இருந்து விட முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு உண்மையான காரணம் தான் என்ன? சற்றே சிந்தித்துப் பார்த்தால்... வரும் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கு பதிலாக தற்கொலை செய்து கொள்வது எளியது என அனேகர் நினைக் கின்றனர். உண்மையில் இது தனக்குத்தானே கொடுத்துக்கொள்ளும் மிகப்பெரிய தண்டனை. இந்த தண்டனை கொடுந்தவறு செய்து விட்டு மரணதண்டனை அனுபவிப்பவரை விட மிக மோசமானது. செய்த தவறை பெரியதாக கருதியும் அவமானம் என்ற பெயரில் மனம் தாங்காமலும் தற்கொலை முயற்சி நடக்கின்றது. தன்னை தற்காத்துக்கொள்ள முடியாதவர்கள் தான் தற்கொலை முயற்சியை மேற்கொள்வார்கள். இவர்கள் முக்கியமாக பிரச்சனையை மட்டுமே எண்ணுகின்றனரே, தவிர பின் விளைவை யோசிப்பதில்லை. தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களும், தற்பெருமை அதிகமாக இருப்பவர்களுக்கும் கூட இப்படிப்பட்ட எண்ணம் வருவது வழக்கம். தான் காத்த பொறுமையை பெரிதென நினைத்து பொறுமையற்றவர்களாக ஆகி இந்தத் தவறை செய்கின்றனர். பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு என்று சொல்பவர்களின் இறுதி முடிவு இதுவாகத்தான் இருக்கும். பொறுமைக்கே ஒரு எல்லையா? எல்லையிருந்தால் அதன் பெயர் பொறுமையா? பொறுமையாக இருந்துவிட்டால் போதுமே, நீங்கள் நினைத்த அனைத்தும் உங்கள் பின்னே அடிமைபோல் வரும்.

தனது இயலாமையை நினைத்துக் கொண்டே இருப்பது மிகவும் தவறு, முடிந்ததை செய்து நடந்ததை நினை த்து மகிழ்ந்து திருப்தியுடன் வாழ்வதுதான் சரி. நினைத்தபடி எல்லாமே யாருக்கும் நடப்ப தில்லை, முயற்சிப்பது நமது வேலையே தவிர வெற்றி என்பது நமது புண்ணியத்தின் அடிப்படையில் கைகூடுவது. அந்த புண்ணியத்தை சேமிக்க நாம் எந்த முயற்சியும் செய்வதில்லை, மாறாக எனக்கு எதுவும் கிடைக்க வில்லை, நான் வாழ்வதே வீண், எனக்கு அதிர்ஷ்டமில்லை, என்னால் வெற்றி கொள்ள முடியவில்லை, என்று இப்படி ஏதேனும் ஒரு காரணத்தை மட்டும் சொல்லிக் கொண்டே செல்வது தீர்வாகாது. எந்த தீர்வும் பிறரிடமிருந்து கிடைக்காது, நாமேதான் தீர்வை உருவாக்கவேண்டும். உண்மையில் சொன்னால் அனைத்து பிரச்சனைக்கும் தீர்வு, அந்த பிரச்சனைக்கு முக்கிய காரணமாக தன்னைக் கருதினாலே கிடைத்துவிடும்.

மற்றவர்களையோ, ஏதோ ஒரு சூழ்நிலையையோ காரணமாக்கினால் அந்த பிரச்சனை தீராமல் மேலும் அதிகமாகி விடும்.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள வலிக்கு உதவும் கரங்களை மீறி, வலியின் தாக்கம் அதிகரிக்கும் போது, சம்மந்தப்பட்டோர், தற்கொலைக்கு முயல்வார்கள். ஆனால் இது ஒருவரின் தனிப்பட்ட தேர்வாகும். காரணங்கள் ஆயிரம் இருக்கலாம்; ஆனால், அந்த காரணங்களை கையாள, அதிகமான மன தைரியம் தேவைப்படும். மனம் தன் கட்டுப்பாட்டின் வரம்பை மீறும்போது, தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் தளைத்தோங்க ஆரம்பிக்கின்றது. மனவமை தான் மனிதவாழ்வு. மனிதனுக்கு பலவீனம் பயம். பயம் நரக வாழ்க்கை. வலிமையே மகிழ்ச்சியான வாழ்க்கை தரும். பலவீனமும், பயமும் ஒரு மனிதனுக்கு இடையறாத சித்தரவதையாகவும், துயரமாகவும் அமைகிறது. எந்த வலிக்கும் ஒரு பரிகாரமுண்டு. அந்த வேதனைக்கு ஒரு படி மேலே சென்று விட்டால் போதும் வலியிருந்தாலும் வேதனையாக இருக்காது. என வே வலிக்கு வலிகொடுத்து நல்வழிதனை தன தாக்குங்கள். பிரிந்த உறவுகள், வலி நிறைந்த விழிகள், கசப்பான காலங்கள் இவற்றோடு நம் காலத்தை கடத்தி விட முடியாது. இருப்பதைக் கொண்டு வெறுப்பதைப்போக்கி ஓடுகின்ற நதியாய் இருக்க வேண்டும். விட்டமில்லா வானத்தில் இறக்கையதை நம்பி வலம்வரும் பறவைபோல், வாழப்பிடிக்கவில்லை என்று விளையாட்டுக்கும் கூறாதீர்கள். வாழ்க்கை இறைவன் கொடுத்த வரம். வாழ்க்கை என்ன வாழைமரமா வெட்டி சாய்ப்பதற்கு, அது கூட வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்றது. மனித இனம் ஏன் இப்படி வாடிப் போகின்றது. வாழப்பிடிக்கவில்லை எனில் ஏன் பிறந்தாய்? என்ற கேள்விக்கு கூட நானா பிறந்தேன்? என்னை பெற்றார்கள் என்று பதில் கூறுவார்கள். பிறக்கும் போது யாரிடம் எந்த வினை யும் இல்லையே, வினையை வளர்த்தது யார்? நம்மால் விளைந்த வினையை நாம் தான் களைய வேண்டும் அல்லவா! இதற்கு தன்னை மாய்த்துக் கொள்வது சரியாகாது. இயல்பாய் சிரிக்கும் தேவதையின் சிலைபோல் சிரித்துக்கொண்டே இருக்கப் பழகுங்கள். சிரிப்பின் சிறப்பது இறப்பை வெல்லும். வரும் சோர்வது உங்களுக்குள் எந்த தேர்வையும் எதிர்கொள்ளவிடாது. உங்களை நோக்கி வந்த அம்புகளை சேர்த்து வையுங்கள், அதைக் கொண்டு ஆளக்கற்று, நம் அடையாளத்தை புரியவைப்போம்.

உடல் நலம் பற்றி நிறைய யோசிக்கும் நாம் மன நலம் பற்றி அதிகம் கவலைப் படுவதில்லை. உண்மையில், 300க்கும் அதிகமான மனநிலை பிரச்சனைகள் இருப்பதாக கூறப்படுகின்றது. மனதைப் பக்குவப் படுத்துங்கள் இல்லை எனில் பாம்பின் நஞ்சைக்காட்டிலும் கொடியது மனப்பிரச்சனை. மனக்குழப்பம் தான் ஒருவருக்கு இயற்கைக்கு மாறான செயலைத் தூண்டுகிறது. வரும் வெற்றி தோல்விகளை மிகக்கவனமுடன் கையாளக் கற்றுக்கொள்ளுங்கள். வரும் வெற்றிகளை தலைமேல் வைக்காதீர்கள், தோல்விகளை மனதினுள் வைக்காதீர்கள். குழப்பங்களை குத்தகைக்கு எடுத்து, கொட்டுவதற்கு மன மென்ன குப்பைக்கிடங்கா?

தொடர்ந்து ஒரே பிரச்னை, உங்களைப் துன்புறுத்துகின்றது எனில் அது மன நோயாக மாற ஆரம்பித்து விட்டது என்றே அர்த்தம். இதற்காக பயப்படத் தேவையில்லை. **வாழ்நாளில் இப்படியெல்லாம் நான், பிரச்னை யை சந்தித்ததே இல்லை** என்று கூறவும் வேண்டாம். அனைவரும் ஏதாவது ஒரு கட்டத்தில், பெரிய அளவிலான பிரச்னைகளை சந்தித்துத்தான் ஆகவேண்டும். பாதிப்பை, ஆரம்பத்திலேயே கவனித்து சரிசெய்து விட்டாலே போதுமானது. எந்த பிரச்சனையும் வந்தது என்றால் ஒரு நாள் சென்றுதான் ஆகவேண்டும்

என்பதில் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும். நிரந்தரமற்ற உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு, தொல்லைகள் மட்டும் நிரந்தரம் என்று நினைத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக இந்த வியாதியை யாராலும் எப்போதும் சரி செய்ய முடியாது.

மாவட்ட அளவில் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த கவர்னர் ஒருவருக்கு தீடீர் என ஒரு விபத்து ஏற்பட்டுவிடுகின்றது. அதில் சரியாகியும் அந்த விபத்தால் அமெரிக்கா செல்லும் வாய்ப்பை இழந்த அவர் வெறுப்பில் தனது வாழ்க்கையின் விளிம்புக்கே செல்லத் துணிந்துவிடுகிறார். செல்லும் வழியில், அவர் அமெரிக்கா பயணிக்க இருந்த விமானம் விபத்தில் சிக்கியது என்ற செய்தி பார்த்து தனது தவறான முடிவை கைவிட்ட செய்தியை நீங்கள் அறிந்ததுண்டா? இப்படிப்பட்ட உண்மைச் சம்பவம் எத்தனையோ உள்ளது. வாழ்க்கை என்பது இன்ப துன்பங்களால் ஆனது என்பதைப் புரிந்து நடப்பவர்கள் யாரும், கடைசி வரை முயற்சி செய்து கொண்டே பகவான் துணையாக வைத்து நடப்பவை அனைத்தும் நல்லதே என நினைத்து முயற்சிகளை கைவிடாமல் தொடர்ந்து செல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். நின்றுபோகும் அளவிற்கு மனதில் ஒரு திகட்டல் வந்தாலே மிகவும் ஆபத்து.

எனக்கு எல்லாம் தெரியும்; நான் முக்கியமானவன்; எனக்கு மட்டும் தான் பிரச்சனை, துக்கம் என்று யார் நினைத்துக் கொண்டிருக்கின்றனரோ, அவர்களை இந்த மாயை தனதாக்கிக் கொள்ளும், ஜாக்கிரதை!

மறதி மொத்தத்தில் ஒரு அருமையான மருந்து என்பதை மறந்துவிடாதீர்கள். மாணவப்பருவத்தில் மறதியால் கஷ்டப்பட்ட நாம் இதை மறக்கமுடியாதா? இல்லை, அந்த மறதி வேறு, இந்த மறதி வேறா? இரண்டும் மனதின் பிதிபலிப்பே தவிர வேறில்லை. இறைவன் படைப்பிலே அனைவரின் மனதிலும் இந்த ஒரு அருமையான மறதி மருந்து இயற்கையாகவே உள்ளது என்று சொல்லித் தெரியத் தேவையில்லை. மறந்து விடுங்கள் மாற்றிவிடுங்கள், தொடர்ந்து விடாதீர்கள்.

சிரிக்க மறந்த நாள் இப் புவியில் வசிக்க மறந்தநாள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நல்லதை விதைத்திருந்தால் நல்லதே அறுவடையாகும். அன்பிற் சிறந்த தவமில்லை என்றார் பாரதி. அன்பை விதைத்து, உள்ளதைச் சொல், நல்லதைச் செய்து ரசித்துவாழ்வோம்.--

மானிட ஜென்மம் மகத்தானது, அதில் இறைவன் கொடுத்திருக்கும் கொடுப்பினை களைப் பற்றி யோசித்தாலே போதுமே. அந்த கொடுப்பினைகளில் குறையுள்ளவர்கள் கூட இந்நாட்களில் மிகப்பெரிய சாதனை புரிந்து வருகின்றார்கள் ! உலகிலேயே முதன் முறை யாக ஒரு கால் இல்லாமல் உயர்ந்ததிலும் உயர்ந்த மலை உச்சியை (எவரெஸ்ட்) அடைந்தவர் என்ற பெருமை ஒரு இந்தியப் பெண்மணிக்கு (அர்னிமா சின்கா) கிட்டியுள்ளது. நம்மிடம் இருக்கும் குறைகளைப் பற்றி யோசிக்காமல், அந்த குறையையும் தாண்டி ஒரு இலக்கை கணித்து முயற்சி செய்து அடைந்து விட்டால், அந்த குறையின் கறை யைக் கூட கழுவி விடமுடியும். குறையில்லாத மனிதன் இவ்வுலகிலேயே எங்குமில்லை. குறையை நிறையாக மாற்ற கிடைக்கும் எத்தனையோ வாய்ப்புகளை கண்டறிந்து, நம்மைவிட்டு இந்தக் குறை காணடிப்போமே! இரும்பாய் துருப்பிடிப்பதை விட கரும்பாய் இருந்து சக்கையாவது மேல். **வாழ்க்கை வாழத்தான்! வீணடிப்பதற்கல்ல!**





# சத்குரு ஒருவரே

*தமிழாக்கம் பி.கு. சுந்தர்ராஜன், சென்னை*

உலகில் குரு என்று சொல்லிக் கொள்பவர்களை மக்கள் உயர்வாகவும், மதிப்பு மரியாதையுடனும் ஏற்றுக் கொள்கின்றனர். பக்தர்கள் அவர்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து தேடிச் செல்கின்றனர். அவர்கள் கூறும் ஒவ்வொரு சொல்லையும், அறிவுரைகளையும் சத்தியமானவை என எண்ணுகின்றனர். மானிட குருக்களை உயர்வாக மதிக்கின்றவர்கள் அவர்களுடைய நேர்மையான சீடர்களாகி தனக்கு அடுத்த பிறவி சுகமான வாழ்வு, அல்லது மோட்சம் கிடைக்கும் என நம்பி அவர்களைப் பின்பற்றுகின்றனர்.

அநேகருக்கு குரு எனப்படுபவர் தமக்கும் இறைவனுக்கும் ஒரு இணைப்பு பாலமாக இருந்து வழிகாட்டுகின்ற ஆன்மீக வழி காட்டியாகவும், ஓர் எடுத்துக்காட்டாக இருந்து நேர்மை, நன்னடத்தையை மனித குலத்திற்கு கற்பிக்கின்றவராகவும் நம்புகின்றார்கள். தற்கால சூழ்நிலையில் குரு எனப்படுகின்றவர் வாழ்க்கையில் அனுபவிக்கின்ற துன்பம், துயரம் தேவதைகளிலிருந்து விடுவிக்க இறைவனால் அனுப்பப்பட்ட தூதுவராக, பின்பற்றுகின்ற சீடர்களுக்கு தோற்றமளிக்கின்றார். அமைதி மற்றும் நிம்மதியான வாழ்வைத் தேடி அலைபவர்களுக்கு புகலிடமாக அவர்கள் கண்களுக்கு காணப்படுகிறார். கூர்ந்து கவனித்தோமானால் மக்கள் அவர்கள் மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கை அத்தனையும் மிகையானது என்பதே உண்மை. சில அஞ்ஞானிகள் மானிட குருக்களை கிருஷ்ணராகவும், பகவான் சிவனுடைய அவதாரமாகவும் மற்றும் பெண் தேவதைகளாகவும் காண்பிக்கின்றனர். மேலும் சிலரோ தன்னைத்தானே கடவுள் (சிவோகம்) என்று கூறிக் கொண்டும் இருக்கின்றனர்.

உண்மையில் சத்தியமான குரு என கூறப்படுபவர் சரீரத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்கின்றார். அவர் நிராகார் சிவபரமாத்மா என்ற ஒருவரே. அவர் ஒருவர் தான் பந்தனங்களில் சிக்கித் தவிப்பவர்களை விடுவித்து முக்தி அளிக்கும் வள்ளலாவார். இறைவன் இவ்வுலகில் அவதரித்து மானிடர்களுக்கு விடுதலை (முக்தி) அளிக்கின்றார் என பகவத்கீதையில் உள்ளது. அது மட்டுமல்லாது சாது சன்னியாசிகள், ரிஷி முனிவர்களுக்கும் முக்தி அளிப்பவர் அவர் ஒருவரே யாவார்.

பிரபஞ்சம் பற்றிய ஞானம் அனைத்தும் சிவபரமாத்மா ஒருவரிடம் மட்டுமே உள்ளது. ஆதலால் பரமாத்மா ஒருவர் மட்டுமே ஞானக் (அறிவுக்) கடல், எந்த ஒரு மனிதரும் இவ்வாறு கூறிக் கொள்ள முடியாது. பகவான் மட்டுமே உலகில் அவதரிக்கும்போது தன்னைப்பற்றிய அறிமுகத்தையும், ஆத்மா என்பதன் பொருளையும், படைப்பைப்பற்றியும் விளக்குகின்றார். அத்துடன் மூன்றாவது கண் (ஆத்ம ஞானக்கண்ணை) திறக்கின்றார். ஆகவே தான் சாது சன்னியாசிகள் பகவானை நினைவு செய்து தங்களுக்கு ஞானத்தை தெளிவு படுத்தி முக்தி அளிக்க வேண்டுகின்றனர். மனித உருவிலுள்ள குரு முதலானோர் முக்தி, ஜீவன் முக்தி அளிக்க முடியாது. இறைவன் ஒருவரால் மட்டுமே தூய்மையிழந்த ஆத்மாக்களை தூய்மைப்படுத்தி, உலகாயத துயரம், துன்பங்களிலிருந்து விடுவித்து முக்தி அளிக்கும் வல்லமை படைத்தவர். பாவங்களைப் போக்குபவரும் அவரே. பற்றுதல், பந்தனம், விகாரங்கள் ஆகியவைகளிலிருந்து விடுதலைப்

பெறுவதற்காக எளிதான வழிமுறையைக் கூறி புதிய உலக இராஜ்ய பதவியை அளிக்கிறார். சத்தியமான குருவாக இருந்து அனைத்து சாஸ்திரங்களின் சாரத்தை ஞான அமிர்தமாக பருகச் செய்கின்றார். அறியாமையிலிருந்து (அஞ்ஞானி) மாஸ்டர் ஞானக்கடலாக்கி தன்னைப்போலவே இரக்க மனமுள்ளவராகவும், இனிமையானவராகவும் மாற்றுகின்ற வரமளிக்கும் சிவபரமாத்மாவை நினைவு செய்து சொர்க்க பூமிக்கு எஜமானர்களாக ஆவதற்கு தீவிர முயற்சி செய்வோமாக.

## ஞாபகப்படுத்துவது அன்பின் அடையாளமேயாகும்

நாம் ஒன்றை மறந்துவிடும்போது அல்லது காலதாமதப்படுத்தி விடும்போது, அதைப்பற்றி ஒருவர் நமக்கு நினைவு படுத்தினால் அதனை அன்பின் காரணமாகவே அவர் செய்கின்றார் என எடுத்துக் கொள்வது நலமாகும். ஆனால் சில சமயங்களில் பிறர் நமது கவனத்திற்குக் கொண்டு வருவதை நம் மனம் விரும்புவதில்லை. ஏனெனில் அவர் நம்மிடம் குறை காணுவதாகக் கருதி விடுகிறோம். மேலும் நமது அறிவுடைமைக்கு அல்லது ஞாபக சக்திக்கு இழுக்கு எனவும் நினைக்கிறோம். இத்தகைய நினைவு நமக்குள் எரிச்சலை உண்டாக்குவதால் எனக்குத் தெரியும் நீ உன் வேலையைப் பார் என்றும் கடுமையாக சாடுவதும் உண்டு.

இத்தகைய பிரதிபலிப்பு சூட்சுமமான அகம்பாவத்தின் அடையாளமேயாகும். இந்த சுபாவம் நல்லவற்றை மனமுவந்து சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் பணிவுத் தன்மையைக் கெடுக்கின்றது. காரணம், அகம்பாவமானது நமது ஞாபக சக்தி மிக நன்றாகவே உள்ளது, அதில் எந்தக் குறையுமில்லை என்ற எண்ணத்திற்குத் தூபம் போடுகிறது. ஆதலால் நினைவு படுத்துவது நல்லது தானே என்ற எண்ணத்திற்கு இடமில்லாமல் போய்விடுகிறது. உண்மையில் ஞாபகப்படுத்துவது அன்பின் பிரதிபலிப்பேயாகும். இதை ஆழமாகச் சிந்தித்தோமேயானால் அகம்பாவம் நமக்கு பாதிப்பு உண்டாக்குகிறது என்பதை உணர முடியும். நமது வாழ்நாட்களில் எதிர்பாராமல் வரும் சில சந்தர்ப்பங்களில் மற்றவரின் அன்பை அனுபவம் செய்யத்தவறும்பொழுது, நமக்கு மிஞ்சுவது அவமானமும், வேதனையுமாகும். அகம்பாவம் நாம் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் நினைத்ததைச் செய்ய முடியும் என்ற எண்ணத்திற்கு வித்திடுகின்றது. உண்மையில் தவறு நேர்ந்திருந்தாலும், அது எல்லோருக்கும் பொதுவானது தான் என்ற போர்வையில் நம்மை மறைத்துக் கொள்ள முயலுகின்றோம். ஆனால் இந்த எண்ணம் தவறானது மட்டுமல்ல, அறியாமையுமாகும். பணிவு, அன்பின் அடையாளம். அது மனிதனை மகானாக்குகின்றது.

**உங்களிடம் விவேகம், பொறுப்பு மற்றும் நம்பிக்கை இருந்தால்,**
**முடியாததும், முடிந்து விடும்.**
**எதிர்மறையான சொல் காதில் விழுமானால் அதை**
**அடுத்த காது வெளியேற்றி விடட்டும்.**

ஆசிரியரும் பிரசுரிப்பவரும் பி.கு. அண்ணபூர்ணா, பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம், சாந்திதாமம், பிளாட் எண்: 3702, Q-96, 3வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-40 அச்சிட்டோர் தா. தியாகேசன், தங்கேஷ் பிரிண்டர்ஸ், சென்னை-5
R.No.49463/87





**ஸ்ரீலங்கா:** ஸ்ரீலங்கா ஜனாதிபதி மாத்ரிபாலா சிரிசேனா அவர்களுக்கு இறை நினைவு அன்பளிப்பு வழங்குகின்றார் பி.கு. சிவஞானம், மாத்தலே இராஜயோகா நிலைய சேவை ஒருங்கிணைப்பாளர்

**சென்னை:** மூத்த சகோதரர் பி.கு. பிரிஜ்மோகன் அவர்கள் பிகு மாணவர்களுக்கான வகுப்பில் பி.கு. பீனா, பி.கு. சுந்தரேசன், பி.கு. கலாவதி





**மதுரை:** விவசாயிகளை வல்லமைப்படுத்தும் அகில இந்திய பேரணி துவக்க விழாவில் R.V.N. திரு. கண்ணன் அவர்கள், Sec., ADMK Party, திரு. செல்வராஜ், கவுன்சிலர். Dr. V.R. வீரபத்திரன், Project Director, District Rural Development Agency, திரு. N. சம்பத்குமார், Joint Director, Agriculture Dept. பி.கு. மீனாட்சி மதுரை துணை மண்டல பொறுப்பாளர், பி.கு. உமா






**கடலூர்:** புதிய கட்டிட திறப்பு விழா திறந்து வைக்கின்றார் பி.கு. பீனா உடன் திருமதி கோமதி சிவலிங்கம் ஊராட்சி மன்றத் தலைவி

**திண்டிவனம்:** சமீபத்தில் பி.கு. பீனா அவர்களால் திறந்து வைக்கபட்ட புதிய கட்டிடம்.






**ஊட்டி:** மூத்த குடிமக்களுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் Dr. பி.கு. மகேஷ் (மதுபன்), மேடையில் Dr. P. சங்கர், IAS மாவட்ட ஆட்சியர், Dr. K.R. ரவி, Joint Director, Health Service, திருமதி வசந்தகுமாரி,SARAS Trust, பி.கு. இராஜேஸ்வரி வரவேற்கின்றார்

பயிற்சி அளிப்பவர்கள் Dr. பிகு. மகேஷ் (மதுபன்) , Dr. பிரபாகர், வேலூர் கலந்து கொண்ட மூத்த குடிமக்கள்

R.No. : 49463/87




சென்னை: சமீபத்தில் நடந்த 12 ஜோதிர்லிங்க தரிசன துவக்க விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் ந. அப்துல்ரஹிம், திரு. நரேஷ்குப்தா, ஒ.ஆ.ந. திரு. பா. பெஞ்சமின், துணைமேயர் மற்றும் பலதுறையை சார்ந்த முக்கியஸ்தர்கள் உடன் பிகு. பீனா, பிகு. ஜான்சிராணி, பிகு. பத்மா



சென்னை (12 ஜோதிர்லிங்க தரிசனம்): இராஜயோக அரங்கினை பார்வையிடும் மாண்புமிகு அமைச்சர் B.V. இரமணா.



மாண்புமிகு அமைச்சர் S. கோகுல இந்திரா அவர்கள் 12 ஜோதிர்லிங்க தரிசன நிகழ்ச்சியில் வருகை தந்தபோது



சென்னை (12 ஜோதிர்லிங்க தரிசனம்): கைலாச பர்வத தத்ரூப காட்சி மற்றும் நடன நிகழ்ச்சி



முன்னாள் நிதி அமைச்சர் சி. பொன்னையன் அவர்கள் 12 ஜோதிர்லிங்க தரிசன நிகழ்ச்சியில் வருகை தந்தபோது







சாந்திவன், மவுண்ட் அபு (பலதுறையை சார்ந்த முக்கியஸ்தர்கள் மாநாடு)

கலைமாமணி திருமதி பார்வதி ரவி கண்டசாலா நாட்டிய குழுவினரின் கலை நிகழ்ச்சி.

Dr. M. சாய்பாபா அவர்கள், Senior Scientist and Director, HRM, உரை நிகழ்த்துகின்றார்.

வரவேற்பு பாடல் பாடுகின்றார் தமிழகத்தின் பத்மஸ்ரீ Dr. S. சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள்